Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 388

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது மாசி 29 ஆம் நாள் ஷவ்வால் 16 (13-3-63) புதன்கிழமை இதழ் 33

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

# சீன - இந்திய பேச்சு; சூவுக்கு நேரு பதில்

## கொழும்பு யோசனைகளை ஏற்றாலே சாத்தியம்

புதுடில்லி, மார்ச் 12

"எல்லைப் பிரச்னையை அமைதியான முறையில் தீர்க்கவேண்டுமென்ற விருப்பம் சீனுவுக்கு உண்மையாகவே இருந்தால் கொழும்பு யோசனைகளை அப்படியே முழுதுமாக சீனு ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று இந்தியப் பிரதமர் நேரு சீனுவுக்குத் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் மூன்றும் திகதி சீனப்பிரதமர் சூ-என்-லாய் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு இம்மாதம் 5-ம் திகதி பிரதமர் எழுதிய பதில்கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்: சீனப்பிரதமரின் கடிதமும் இந்தியப் பிரதமரின் பதிலும் இன்று இந்தியப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

எல்லைத்தகராறுக்கு சமாதானத் தீர்வுகாண்பதற்கு சீனு விரும்பினுல், கொழும்பு யோசனைகளை எவ்வித நிபந்தனையுமில்லாமல் இந்தியா ஏற்றுக்கொண்டதுபோல் சீனுவும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று பிரதமர் நேரு தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு யோசனைகளை சீனு ஏற்றுக்கொண்ட பின்னரே நேரடிப்பேச்சுவார்த்தை சாத்தியமாகும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு யோசனைகளுக்கு ஆக்கமுறையில் சீனு ஆதரவு தெரிவித்துள்ளதாக நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு ஒரு அடிப்படையாக இந்த யோசனைகளை சீனு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு, சீனு கொழும்பு யோசனைகளுக்கு நிபந்தனை இடுவதன்மூலம் கொள்கையளவில் கூட அதை ஏற்கவில்லையென்பது தெளிவாகியுள்ளதென்று தெரிவித்துள்ளார். சீனு சொந்த விவகாரங்களை வற்புறுத்துவதை விடுத்த கொழும்பு யோசனைகளை அப்படியே ஏற்றுக்கொள்வதன் மூலம் நேரடிப்பேச்சுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கிகொள்ளலாம் என்று பிரதமர் நேரு தமது

(5-ம் பக்கம் பார்க்க)

## மீன்பிடியாளருக்கு கடன் உதவி

### வழங்கும்முறை சரியல்ல என துரையப்பா ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் உள்ள மீனவர்களுக்கு கடனுதவி ஒதுக்கப்பட்டுள்ள முறையை யிட்டு யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. ரி. துரையப்பா ஆட்சேபம் தெரிவித்துள்ளார். உரிய முறையில் கடனுதவியை ஒதுக்கி புதிதாக மீண்டும் விசாரணை நடத்துமாறு அவர் மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவிற்கு அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடனுதவியில் பூநகரி, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கடனுதவி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதைத் தான் ஆட்சேபிப்பதாகவும் திரு. துரையப்பா தெரிவித்தார். இன்று மீன்பிடிக் கடனுதவி பெறுவதற்கு மனுச்செய்தவர்களை விசாரணை அதிகாரி திரு. அத்தபத்து விசாரணை 'செய்தாரென்றும், கடனுதவி ஒதுக்கப்பட்டுள்ள விதம்பற்றி தான் அங்கு சென்று ஆட்சேபம் தெரிவித்ததாகவும் திரு. துரையப்பா மேலும்தெரிவித்தார்.

திரு. துரையப்பா மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவிற்கு அனுப்பிவைத்துள்ள தந்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

"யாழ்ப்பாணத்தில் உள்ள மீனவர்களுக்கு கடனுதவி ஒதுக்கப்பட்டுள்ள முறையை யிட்டு நான் ஆட்சேபிக்கின்றேன். இப்பொழுது கடனுதவி ஒதுக்கப்பட்டுள்ள முறை நியாயமற்றதாகும். உரிய முறையில் கடனுதவியை ஒதுக்கி மீண்டும் புதிய விசாரணை நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்."

## வடமாகாணத்தில் வெங்காயச் செய்கை

### சில காலங்களில் ஆணையிறவுத்தடை அகற்றப்படும்

கொழும்பு, செவ்வாய்

வெங்காயச் செய்கைக்கு போகமில்லாத டிசம்பர் தொடக்கம் பெப்ரவரிவரையானகாலத்தில்ஆனையிறவிலுள்ள தடையை அகற்றி அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகப்படியான வெங்காயச் செய்கைக்குத் தூண்டுவதென விவசாய இலாகா தீர்மானித்துள்ளது.

சென்ற வருடம் நாட்டிற்குத் தேவையான வெங்காயத்தில் 80 சதவிகிதம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனாலும் 29 லட்சம் ரூபாவிற்கு வெளிநாடுகளிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டது. உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை வெங்காயச் செய்கைக்குப் போகமில்லாதகாலம் வரையும் பாதுகாத்து இருப்பில் வைத்திருப்பதற்கான வசதிகள் இல்லாததே இவ்விதம் வெளிநாடுகளிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதற்குக் காரணமாகும்.

வெங்காயம் பயிர் செய்யப்படும் நேரத்தில் விளைந்த வெங்காயத்தை பாதுகாப்பு இருப்பில் வைத்தால் போகமில்லாத காலங்களில் வெங்

(5-ம் பக்கம் பார்க்க)

## "வாக்குறுதியை மீறியதற்கு தெய்வத் தீர்ப்புக் கிடைக்கும்"

### கல்லூரி பரிசளிப்பு விழாவில் எஸ். ஜே. வி. பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் மக்களாகிய நாம் சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே இங்கு வாழ்ந்து வருகின்றோம். தென்னிந்தியாவிலும் தமிழர்கள் பன்னெடுங் காலமாகவே இருந்து வருவதற்குச் சான்றுகள் உண்டு. தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய மக்களை இங்குள்ள சிங்கள மக்கள் ஒழித்துக் கட்ட எடுக்கும் முயற்சிகள் வீணானவையாகும் என்று தமிழரசுத் தலைவர் எஸ். ஜெ. வி. செல்வநாயகம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பரிசளிப்புப் பேருரை நிகழ்த்துகையில் கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:-

அரசியல் உரிமைகள் மக்கள் வாழ்க்கையில் ஓர் அம்சமாகி

5 ம் பக்கம் பார்க்க




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட
ரோஸ்பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்
இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை.
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீட்ஸ் வாங்கும்பொழுது
'ரோஸ்' பிராண்ட்
என்றே கேட்பீர்கள்

## வரி விளம்பரம்

### விவாகம்

வட்டுக்கோட்டை, அராலி வடக்கு ஸ்ரீ ப. இரத்தினக்குருக்களின் புதல்வர் ஸ்ரீ நாகேந்திர சர்மாவுக்கும், கொக்குவில் ஆசிரியர் ஸ்ரீ முத்துச்சாமி ஐயர் புதல்வி சௌ. கனகாம்பிகை அம்மாளுக்கும் பங்குனி 3-ந் திகதி (16-3-63) சனிக்கிழமை முற்பகல் 10-54 முதல் 11-44 க்குள் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறுகிறது.
761

### வேப்பமரம் விற்பனைக்கு

கொடிகாமம் உடையார் வளவில் பெரிய வேப்பமரம் விற்பனைக்கு இருக்கிறது. நேரில் விசாரிக்கலாம்.

### 56 ஏக்கர் நிலம் விற்பனைக்கு

மந்துவில்--சரசாலை வயல் வெளியில் சரசாலை--பருத்தித்துறை வீதிக்கருகில் 56 ஏக்கர் நிலம் விற்பனைக்கு இருக்கிறது. வயலுக்கும் தென்னை நாட்டுவதற்கும் உகந்தது. விபரங்கட்கு: சி. எம்.எஸ். நாதன், உடையார்வளவு, கொடிகாமம்.
760

### தேவை

எமது தயாரிப்புகளை சயிக்கிள்களில் சென்று விற்பனை செய்ய ஆட்கள்தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். விநாயகம் இன்டஸ்றீஸ், 39 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
762

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## சர்வதேச இருப்புநிதி அதிகரிப்பு

கொழும்பு, திங்கள்

வெளிநாட்டு மூலதனங்களின் ஒரு பகுதியாக மத்திய வங்கியில் உள்ள சர்வதேச இருப்பு நிதி பெப்ரவரி மாதம் அதிகரித்துள்ளது. சென்ற மாதத்திலே இதுவரை காலமும் இல்லாத அளவிற்கு சர்வதேச நிதி 340 லட்சம் வரையில் சேர்ந்துள்ளது. ஜனவரி முடிவில் சர்வதேச இருப்புத் தொகை 148,052,116 ரூபாவாகும். பெப்ரவரி முடிவில் உள்ள இருப்புத் தொகை 181,982,672 ரூபாவாகும்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரவேண்டிய பணமும், மிகுதிப் பணமும் இம்மாதத்தில் அதிகமாகச் செலுத்தப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

## இலங்கைத் தொழிலாளர் கழகம்

அட்டன், திங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் அண்மையில் அட்டன் நகரில் அமைக்கப்பட்ட "இலங்கைத்தொழிலாளர்கழகம்" அரசாங்கத் தொழிற்சங்கப் பதிவதிகாரியஸ்தரால் தொழிற்சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பதிவு எண் 2012 ஆகும்.

அட்டன், மஸ்கெலியா, அக்கரப்பத்தனை போன்ற இடங்களில் இக்கழகத்திற்கு ஏற்கனவே அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

## கடவுள் இதை ஏற்பாரா?

இலங்கையில் கல்விபயின்று வரும் ஒவ்வொரு தமிழ்மாணவனுக்கும், ஏனைய பாஷையைப்பேசும் மாணவருக்குக் கொடுக்கப்படும் உரிமைகளில் பங்கு உண்டு என்பதை அறிவுள்ள எவரும் மறுக்கவே மாட்டார்கள். அப்படி ஒரு சாராருக்குக் கொடுக்கப்படும் உரிமையை இன்னொருசாராருக்குக் கொடுக்க மறுப்பது கொடூரமான பாரபட்ச செயலாகும்.

இந்தப் பாரபட்சமான அநீதிச் செயலில் ஒன்றை 1957-ம் ஆண்டிலிருந்து தமிழ்மாணவர்கள் ஏற்றுக் கொண்டே வருகின்றார்கள். 1957-ம் ஆண்டிலிருந்து தமிழ் மாணவர்களைத் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் வர்த்தகக் கல்வியைக் கற்கும் வசதியைப் பெற்றுவருகின்றார்கள். தமிழ் மாணவர்களில் பலர் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் வர்த்தக பாடங்களுடன் தேர்ச்சி பெற்றுவிட்டு வேலையில்லையே என்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்திலும்கூட அரசாங்கம் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் இக்கல்வியைக் கற்பிப்பதற்கேற்ற வசதிகளைச் செய்யமறுப்பின் இது மிகவும் அநீதியான செயலும் கடவுள் நீதிக்கு மாறானதுமெனக் கல்வி மந்திரி அறியாரா?

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே உள்ள பாடசாலைகளில் வர்த்தக ஆசிரியர்கள் இல்லாததால் இப்பாடங்களைப் படிக்க விரும்பும் மாணவர்கள் பாடசாலையைவிட்டு வெளியார் நடத்தும் கல்வி நிலையங்களில் சேர்ந்து படிக்கின்றார்கள். இதனால் மாணவர்களுக்கு எவ்வளவோ பணச் செலவும் கஷ்டமும் ஏற்படுவதைக் கல்வியிலாகா அதிகாரிகள் அறியாமல் இருக்கலாம்.

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத்தினர் இக்கஷ்டங்களையெல்லாம் அறிந்து, தமிழ்ப் பிள்ளைகளுக்கும் வர்த்தகக் கல்வியைப் போதிக்க வேண்டும். வர்த்தகக் கல்வியில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு ஆசிரியபயிற்சி அளித்து, பாடசாலைகளிலே அவர்களை நியமித்து இக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் இன்னும் வேறுபல கோரிக்கைகளையும் முன்வைத்து செல்ல இரு ஆண்டுகளாக அயராது உழைத்து வருகின்றனர். இதுவரவேற்கத்தக்க மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இவற்றையெல்லாம் கனம் கல்விமந்திரியவர்களுக்கும் பிரதமமந்திரிக்கும் இவர்கள் எடுத்துக்கூறியதன் பயனாக தமிழ்மூலம் வர்த்தக ஆசிரியபயிற்சி வகுப்பை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் 1-3-63-ல் வெளியான 'கசெட்' பத்திரிகையில் ஆசிரியர்களாக உளளவர்கள் மாத்திரம் இப்பயிற்சி வகுப்புப் பிரவேசப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் எனக் கூறப்பட்டிருக்கின்றது. இக்கூற்று மிகவும் மனவருத்தத்தைக் கொடுக்கக் கூடியதொன்றாகும். சிங்களப் பரீட்சார்த்திகளாகவிருந்தால் ஆசிரியரல்லாதவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். தமிழ்ப் பரீட்சார்த்திகளாகவிருந்தால் ஆசிரியர்கள் மாத்திரம் இப்பரீட்சைக்குத் தோற்றலாம். எனக் கல்வி இலாகாகூறுவது ஆச்சரியப்படத்தக்கதாகத்தான் இருக்கின்றது.

தமிழ் மாணவர்களை மீண்டும் மீண்டும் ஒதுக்கிவிடாது வர்த்தக ஆசிரிய பயிற்சி வகுப்புக்கு மற்றய மாணவர்களுக்குள்ள இருக்கும் சலுகையைத் தமிழ்மாணவர்களுக்கும் தந்து, ஆசிரியர் அல்லாத மற்றய மாணவர்களையும் இப்பயிற்சி வகுப்புக்கு விண்ணப்பிப்பதற்கேற்ற வழிகளைச் செய்யவேண்டும். செய்வார்களா?

ஆ. மகாதேவா.
மீசாலை.

## நெசவு நிலையம்

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட வேலணை வடக்கு நெசவுநிலையம் இன்றுவரை வேலை பூர்த்தியாகாது கிடக்கிறது. வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தினரால் கட்டப்படும் இந்நிலையத்திற்கு வேண்டிய உபகரணங்கள் வந்துள்ளபோதும் கட்டடவேலை பூர்த்தியடையாத்தால் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. இதையிட்டு பொதுமக்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளனர். கிராம முன்னேற்றச் சங்கம் இனியாவது விரைவில் நெசவு நிலயத்தை திறப்பதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்யுமா?

வேலணை ச. திருமகள்.

## ராமநாதன் இசைக்கல்லூரி ஸ்ரீ தியாகராஜ உற்சவம்

### நான்கு நாள் ஏற்பாடு விபரம்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலே, ராமநாதன் இசைக்கல்லூரியின் ஆதரவில் 14-ந் திகதி வியாழன் முதல் 17-ந் திகதி ஞாயிறு வரை நான்கு நாட்கள் ஸ்ரீ தியாகராஜ உற்சவம் நடைபெறுகிறது. நீதி அரசர் ஸ்ரீ ஸ்கந்தராசா விழாவினை வியாழன் மாலை 5-30 மணிக்கு ஆரம்பித்து வைக்கிறார். நிகழ்ச்சி விபரம் வருமாறு:-

**வியாழன்**

மாலை 5 நாதஸ்வரம், 5-30 ஆரம்பவிழா, 5-45 இசைக்கல்லூரி மாணவிகள், 6-15 செல்வி நாகம்மா கதிர்காமர், இரவு 7 எஸ். பாலசிங்கம், 8 டி. ராஜசிங்கம், 9 ராம் குமாரஸவாமி.

**வெள்ளி**

மாலை 5 ஆராதனை, 5-30 இசைக்கல்லூரி மாணவிகள், 6 திருமதி சத்யபாமா ராஜலிங்கம், 7 மணி வி. நடேசன், 8 திருமதி பரமேஸ்வரி விஜயரத்னம், 9 ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர்.

**சனிக்கிழமை**

மாலை 5 வி. விஜயசிங்கம், 5-30 இசைக்கல்லூரி மாணவிகள், 6 திருமதி சரஸ்வதி பாக்கியராஜா, 7 எம். வர்ணகுலசிங்கம், 8 எஸ். சோமசுந்தரம்; 9 மணி எஸ். பரம் தில்லைராஜா, 10 வி. எஸ். எஸ். மணிபாகவதர் (ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்.)

**ஞாயிறு**

காலை 8 நாதஸ்வரம், மாலை 5 இசைக்கல்லூரி மாணவிகள், 5-45 கே. ஆர். நடராஜா, 6-45 எஸ். சத்தியலிங்கம், 7-45 மகராஜபுரம் சந்தானம், 8-45 பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை-முகவீணை.

இவ்விழாவில் இலங்கை பிரபல நாதஸ்வர வித்துவான்களான, மாவிட்டபுரம் ராஜா, பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை, என். கே. பத்மநாதன், எம். எஸ். சண்முகநாதன், எஸ். கந்தசாமி, இவர்களும், தவில் வித்வான்களான என். ஆர். சின்னராசா, கே. கணேசன், என். குமரகுரு, இவர்களும், கலந்து கொள்கிறார்கள்.

உற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி ஒலிப்பதிவுசெய்து அடுத்தடுத்தநாட்களில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்திருக்கின்றது.

இவ்விழாவிலே, வயலின் வித்வான்களான ஜி. சண்முகானந்தம், வி. கே. குமாரசாமி, டி. பி. பிச்சையப்பா, எஸ். சோமாஸ்கந்தசர்மா, பி. வைத்தியநாத சர்மா, ஏ. சங்கரய்யர், எஸ். சர்வேஸ்வரசர்மா, எஸ். வைத்தீஸ்வரய்யர், செல்வி பரமேஸ்வரி சுவாமிநாதன் இவர்களும், மிருதங்க வித்துவான்களான ஏ. எஸ். இராமநாதன், ஏ கணேசசர்மா, டி. இரத்தினம், கே. சண்முகம்பிள்ளை, ஏ. சந்தான கிருஷ்ணன், எம். என். செல்லத்துரை, வி. அம்பலவாணர், ஸி. ஜெயசுந்தரம், ஐ. சிவபாதம், எஸ். பாக்கியநாதன், ஆர். பிரகலாதன், இவர்களும், கஞ்சிரா வித்வான்களான, கே. கணேசு, என். ஆர். சின்னராஜா இவர்களும் கலந்து கொள்வதாகத் தெரிகிறது.

## திரு. ஸி. இரத்தினசபாபதி

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திரு ஸி. இரத்தின சபாபதி 38 வருட காலம் இலங்கை ரயில்வேயில் சேவை செய்து ஓய்வு பெற்றார். சாதாரண குமாஸ்தாவாக ரயில்வே சர்வீஸில் சேர்ந்த அவர் படிப்படியாக, ஜெனரல் மனேஜரின் காரியாலய உதவி அதிகாரிப்பதவிக்கு உயர்ந்து தொண்டாற்றினர். ரயில்வே ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின்காரியதரிசியாகவுமிருந்தும் சேவை செய்தார். உண்மையான உழைப்பும், பணிவும் தான் வெற்றிக்கு வழி காட்டுமென்கிறார் அவர்.

## அயூப்பிற்கு பொது வரவேற்பு?

கொழும்பு செவ்வாய்

பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் இலங்கைக்கு விஜயம் செய்யும்போது அவருக்கு, கொழும்பு மாநகரசபை பொது வரவேற்பொன்று அளிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை உதவி மேயர் திரு கிச்சிலான் கொண்டுவரவிருக்கிறார். இதற்கான முன்னறிவித்தலையும் திரு. கிச்சிலான் அனுப்பிவைத்துள்ளார். இத்தீர்மானம்பற்றி நாளை மாநகர சபை கூடும்பொழுது ஆராயப்படவிருக்கிறதாகத் தெரிகிறது.

## திருத்தம்

யாழ்ப்பாணம் மெர்க்கன்டைல் கிரிக்கட் கோஷ்டிச் செயலாளர் திரு.க. காசிவிசுவநாதன் எழுதுவதாவது:-

மெர்க்கன்டைல் இலங்கை வங்கி கிரிக்கெட் போட்டி 10-3-63-ல் நடந்தேறியது. இப்பந்தாட்டத்தில் மெர்க்கன்டைல் வங்கி வெற்றியீட்டியது என்பதற்குப் பதிலாக இலங்கை வங்கி வெற்றியீட்டியது என்று "ஈழநாடு" பத்திரிகையில் வெளியாகிய செய்தி பிழையானது.

வெற்றிதோல்வி முதலாவது இன்னிங்சில் நிர்ணயிக்கப்பட வேண்டியதாக இரு கோஷ்டிகளும் விளையாட்டின் முன்னர் தீர்மானித்தபடி வெற்றி மெர்க்கன்டைல் வங்கிக்குக் கிடைத்தது. எவர்சில்வர் ஹவுசினல் பரிசளிக்கப்பட்ட வெற்றிக் கிண்ணத்தையும் மெர்க்கன்டைல் வங்கி பரிசாகப்பெற்றுக்கொண்டது.

இதற்கு மத்தியஸ்தர்கள் பி. ஜெயராசா, எஸ். இரத்தின சபாபதி அவர்களுடைய தீர்ப்பு சான்றுபகரும்.

## சாவிலும் ஒற்றுமை

எட்டியாந்தோட்டை, திங்கள்

பன்வேகமலைச் சேர்ந்த இரட்டைக் குழந்தைகளான மூன்று வயதுள்ள குணசேனவும் குணசீலியும் திடீரென சுகயீனம் கண்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரங்களின் பின்னர் இருவரும் மரணமானார்கள்.

## தீர்மானம்

தெஹிவளை, செவ்வாய்

கௌதாரா வீதியின் இரு புறங்களிலுமுள்ள முழு நெற்காணிகளையும் பொறுப்பேற்கும்படி விவசாய, நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவைக் கோரும் ஒரு தீர்மானம் தெஹிவளை-கல்கிசை மாநகரசபைக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.


பிரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது 'பிரீடம்' மார்க் கற்பூரம். என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள்.
பிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ்.
மினுவாங்கொட.

# மூன்றுகோடி அமெரிக்கர் பட்டினியின் எல்லையில்...!

வாஷிங்டன், மார்ச் 12

மூன்றுகோடி இருபது லட்சம் அமெரிக்கர் வறுமையின் எல்லையில் இருக்கிறார்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் எப் கென்னடி நேற்றுக் கூறினார்.

வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி காங்கிரஸுக்குச் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில், 1967-ம் ஆண்டில் அமெரிக்காவில் வேலையில்லாதோரின் தொகை 5,500,000 ஆகஅதிகரிக்கலாம் என்றும் திரு. கென்னடி தெரிவித்துள்ளார். தமது வரிகுறைப்பு யோசனைகளுக்கு ஆதரவு தரவேண்டுமென்றும் நாட்டின் பொருளாதார சீர்திருத்தத்துக்கான தமதுயோசனைகளுக்கு ஆதரவுதரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்

வேலையில்லாத் திண்டாட்டம்தான் நமது முதலாவது பொருளாதாரப் பிரச்னையென்று திரு. கென்னடி குறிப்பிட்டுள்ளார். வேலையில்லாத் திண்டாட்டம் வருடத்துக்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவாக்குகிறதென்றும் பெருந்தொகைப்பணம் வீணாகிறதென்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒரு நாடு ஒரு தனி மனிதனைப்போலவே தனது வளத்தையும் வீணாக்கமுடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சில நிபந்தனைகளுடன் பிடோல்ட்டுக்கு ஜெர்மன்தஞ்சம்!

பொன், மார்ச் 12

பிரான்சின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரும் சட்டவிரோத ஸ்தாபனமென பிரஞ்சு அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட இரகசிய ராணுவ ஸ்தாபனத்தின் தலைவருமான பிடோல்ட் சில நிபந்தனைகளுடன் மேற்கு ஜெர்மனியில் தங்கியிருக்க அனுதிக்கப்படுவார் என்று ஜெர்மன் அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

திரு. பிடோல்ட் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் காலாவதியாகும் வாசகால பர்மிட் எடுக்கவேண்டுமென்பதும் அது காலாவதியானதும் அதைப் புதுப்பிக்க வேண்டுமென்பதும் நிபந்தனைகளில் ஒரு அம்சம். இப்பொழுதுள்ளதுபோலவே பிடோல்ட்டுக்கு பொலிஸ் கண்காணிப்புத் தொடர்ந்திருந்துவரும். நடமாட்டத்துக்கும் கட்டுப்பாடு விதிக்கப்படும். அரசியல் நடவடிக்கைகளில் அவர் ஈடுபடக்கூடாது.

அரசியல் தஞ்சம் கோரி மேற்கு ஜெர்மன் அதிபர் அடினாருக்கு திரு. பிடோல்ட் எழுதிய கடிதத்தை அடினார் ஏற்றுக்கொள்ளவில்லை. நேரடியாக கடிதம் எழுதுவது ராஜீய ஒழுங்குமுறையல்ல!

## சென்னையில் ஊர்காவல்படை

சென்னை, மார்ச் 11

சென்னை நகரில் ஊர்காவல் படையை சென்னை கவர்னர் திரு. விஷ்ணுராம்மேதி தொடக்கி வைத்தார். பொலிஸ் துப்பாக்கி ஒன்றால் ஆகாயத்தை நோக்கி ஒரு தடவை சுட்டு திரு. மேதி புது ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்தார்.

ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் ஆரம்பவிழா நடைபெற்றது. 5000 மக்கள் கூடியிருந்தனர். மவுண்ட் ரோடில் விமானத்தாக்குதல் ஒத்திகைகள் நடைபெற்றன.

வேலூரில் ஊர்காவற் படையை ஜில்லா கலெக்டர் திரு. சீனிவாசன் தொடக்கி வைத்தார்.

## ராணுவத்தினருக்கு ரூபா 1000 பரிசு

சென்னை, மார்ச் 11

வீரச் செயல் புரிந்ததற்காக 'வீரசக்கர' விருது பெற்ற இரு ராணுவத்தினருக்கு தலா ரூ 1000 அரசாங்கம் அனுமதித்துள்ளது.

ராணுவ வைத்திய படையைச் சேர்ந்த காப்டன் ராஜா அமிர்தலிங்கம் (காணவில்லை) ராணுவ வைத்தியப் படை அம்புலன்ஸ உதவியாளர் எஸ. ஜோசப் (இறந்துவிட்டார்) இருவருக்கும் வீரசக்கர விருது அளிக்கப்பட்டுள்ளது. இவர்களின் சந்ததியினரிடம் இப்பணம் ஒப்படைக்கப்படும்.

## 'மோட்டார் வோட்டுசாவடிகள்'

சென்னை, மார்ச் 11

ஊழல் எதுவுமின்றி தேர்தல்களுக்கு மோட்டார் வோட்டுச் சாவடிகளை ஏற்பாடு செய்யலாம் என்று சுதந்திரக கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் சட்டசபையில் யோசனை தெரிவித்தார்.

வாககுப் பதிவு ஒரு சில மணி நேரமே நடககும். பெரும்பாலும் ஊரடங்கு உத்தரவு நிலையில் நடைபெறவேண்டும். அத்தியாவசிய சேவைகள்மட்டும் தெருககளில் அனுமதிககப்படவேண்டும். மோட்டார் வோட்டுச் சாவடி வீட்டுககு வீடு செல்லும் வாககாளர்கள் தங்கள் வீடுகளில் இருந்து வாககளிப்பார்கள்.

## 17 பேர் விடுதலை

சென்னை, மார்ச் 11

இந்திய தற்காப்பு விதிகளின்கீழ் காவலில் வைக்கப்பட்ட கம்யூனிஸடுகளில் 17 பேரை விடுதலை செய்யுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலை செய்யப்படுபவர்களின் பெயர்கள் வருமாறு:- கே. வி. பாரதிமோகன்(தஞ்சை), கே. இராமநாதன், கே. முத்தையா, கே. எம். சுந்தரம் (சென்னை), வி. கே. கோதண்டராமன் (வ. ஆ.), ஆர். எச். நாதன் என்னும் ஹாலாஸ்யநாதன் (ராமநாதபுரம்), எம். ஆதிமூலம், எஸ. சண்முகம், (ராமநாதன்), பி. மாணிக்கம் (திருநெல்வேலி), எம். எம். என்னும் முகமத் அலி (கன்னியாகுமரி), கே. வே. சோமு என்னும் ராமசாமி, திருச்சி ஆர். ராமராஜ், எஸ. ஏ. தங்கராஜ், என். வரதராஜன் (மதுரை), பி. புருஷோத்தமன் (தெ. இ.) வி. கண்ணன் (வ. ஆ.), கே. எஸ. பார்த்தசாரதி (செங்கல்பட்டு).

ராஜ்யத்தில் பல சிறைச்சாலைகளில் இன்னும் 23 பேர் காவலில் உள்ளனர்.

## 50,000 பேர் வீடிழந்தனர்

லிமா, மார்ச் 11

ஐகாநகரத்தில் ஏற்பட்ட ஒரு வெள்ளப்பெருக்கில் 50,000 பேர் வீடிழந்தனர். ஒரு தாயும், ழந்தையும் மரணமானார்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அரசாங்கத்துடன் ஒத்துழைப்பது பற்றி கருணாநிதி

சென்னை, மார்ச் 11

சீனரை விரட்டுவதில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதாக தி. மு. க. அறிவித்துள்ளதனை திரு. எம். கருணாநிதி, சட்டசபையில் விளக்கினார். அரசாங்கத்துடன் ஒத்துழைப்பேயன்றி காங்கிரசுடன் ஒத்துழைப்பு அல்ல என்றார்.

ஒற்றுமையை ஏற்படுத்துவது தமது கட்சியின் நோக்கமெனவும், நிரந்தரமான ஐக்கியம் கட்சியின் நோக்கமல்ல என்வும் கூறினார்.

இரண்டாவது அம்சத்தை அவர் விளக்குகையில் பழங்காலக் கோவில் விளக்குகளை உதாரணமாகக் குறிப்பிட்டார். ஒவ்வொரு கண்ணடிக் கோப்பையிலும் தண்ணீரும், எண்ணெயும் ஊற்றப்படுகிறது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று சேராது. ஆனால் திரிக்கு ஆதரவாக எண்ணெய் மேலே தங்குமாறு செய்யவும் கோப்பை சூடாகாதவகையில் பாதுகாக்கவும் தண்ணீர் உதவுகிறது என்று திரு. கருணாநிதி கூறினார்.

## மலேசியா வெளிவிவகார மந்திரிகள் மகாநாடு

மணிலா, மார்ச் 12

மலேசியா சம்மேளன அமைப்பு சம்பந்தமாகத் தோன்றியுள்ள வேறுபாடுகளை நீக்குவதற்கு மலாயா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் வெளிவிவகார மந்திரிகளைக் கொண்ட ஒரு மகாநாடு அடுத்தமாதம் நடைபெறுமென்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மக்கப்பகல் யோசனை தெரிவித்துள்ளார். இந்த யோசனையை இப்பொழுது மணிலாவிலுள்ள இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ ஏற்றுள்ளார்.

## பலே ஆசாமி!

வேலூர், மார்ச், 11

பல சைக்கிளகளை திருடிய வேலூர் பொலிஸ் பயிற்சி பாடசாலையைச் சேர்ந்த பென்னட் கோபால்பிள்ளைக்கு, மாஜிஸ்திரேட் திரு. கோபால் கிருஷ்ணராவ் ஆறு மாதசிறை தண்டனை விதித்தார்.

பென்னட்டிட மிருந்து பொலிஸார் அண்மையில் ஆறு சைக்கிளை கைப்பற்றினர். இவற்றில் இரண்டு சைக்கிள் பொலிஸ்காரர்களுக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது.

## அரபு லீக்கும் ஐ. அ. குடியரசும்

லண்டன், மார்ச் 11

அரபு லீக்குடன் சேர்ந்து பூரண நடவடிக்கைகளிலும் ஈடுபட ஐக்கிய அரபுக் குடியரசு முடிவுசெய்துள்ளது.

ஸிரியாவில் ஏற்பட்டிருக்கும் புதிய புரட்சிதான் அரபு லீக்குடன் ஐ. அ. குடியரசு சேர்வதற்கு வழிவகுத்ததென்று ஐக்கிய அரபு குடியரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

## வடரொடிஷியாவில் கலகம்

லண்டன், மார்ச் 11

வட ரொடிஷியாவில் நேற்று ஒரு கலகம் நடைபெற்றதாகவும் பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக 4 பேர்லகது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

# கம்போடிய மந்திரிசபை தொடர்ந்து பதவியிலிருக்கும்

## இளவரசர் சிகானுக் அறிவிப்பு

நாம்பென், மார்ச் 12

கம்போடிய மந்திரிசபையைத் தொடர்ந்து பதவியில் வைத்திருப்பதென்றும் பார்லிமெண்டைக் கலைப்பதில்லையென்றும் கம்போடிய அதிபர் இளவரசர் நொரடம் சிகானுக் தீர்மானித்துள்ளார்.

கம்போடியாவில் அரசியல் நெருக்கடி தோன்றியதைத் தொடர்ந்து கம்போடியப் பிரதமர் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். இதன்பின் இடதுசாரியினரையும் வலதுசாரியினரையும் மந்திரிசபை அமைக்கும்படி இளவரசர் நொரடம் சிகானுக் அழைத்தார். மன்னரின் அழைப்பை ஏற்று புதிய மந்திரிசபை அமைக்க எவரும் முன்வரவில்லை. இதைத் தொடர்ந்து தாம் பார்லிமெண்டைக் கலைக்கப்போவதாகவும், பொதுத் தேர்தலின்பின் புதிய அரசாங்கம் பொறுப்பேற்கும்வரை நாட்டின் நிர்வாகப் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டிருக்கப்போவதாகவும் இளவரசர் சிகானுக் அறிவித்திருந்தார்.

அரசியல் நெருக்கடி முடிவடைந்துவிட்டதாக இளவரசர் நேற்றுத் தெரிவித்தார். பழைய மந்திரிசபை தொடர்ந்து பதவியிலிருந்துவருமென்றும் பழைய பார்லிமெண்டே தொடர்ந்திருக்குமென்றும் அவர் அறிவித்தார். தீவிர ஆலோசனையின் பின்பே தாம் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக இளவரசர் சிகானுக் கூறினார்.

## பொற்கொல்லருக்கு நிவாரணம்

புதுடில்லி, மார்ச் 12

தங்கக் கட்டுப்பாட்டு விதிகளால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களுக்கு நிவாரணமளிக்கும் திட்டமொன்றை குஜராத் அரசாங்கம் தயாரித்துள்ளதாக குஜராத் முதன் மந்திரி ஜீவராத்மேத்தா தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்படி பொற்கொல்லர்களுக்கு வேறு சிறு தொழில்களை ஆரம்பிப்பதற்குக் கடன் வழங்கப்படுமென்றும் நிலம் வழங்குவதற்கும், வேறு தொழில்களில் பயிற்சி அளிப்பதற்கும் இத்திட்டம் வசதி செய்கிறதென்றும் முதன் மந்திரி தெரிவித்தார்.

## யாத்திரிகர்களின் பணம் பறிமுதல்

பண்டாரவலை, செவ்வாய்

கிராமமொன்றிலிருந்து சிவனொளி பாதமலைக்குப் பிரயாணம் செய்த யாத்திரிகர்கள் கோஷ்டியொன்றிடமிருந்து இரு நபர்கள் பணத்தைத் தந்திரமாக அபேஸ்செய்தனராம்.

ஹப்புத்தளை புகையிரத நிலையத்தில் புகையிரதத்திற்காக யாத்திரீக கோஷ்டி ஒன்று காத்துக் கொண்டு நின்றது. சிறிது நேரத்தில் பக்திப்பாடல்களைப் பாடிக் கொண்டே இருவர் அவர்களுடன் வந்து சேர்ந்தனர். புகையிரதம் வருவதற்கான நேரம் சமீபித்ததும் இருவர்களில் ஒருவர், ரிக்கற் பெறுவதற்கு மற்றவரிடம் பணம் கேட்டார். யாத்திரீகர் கோஷ்டியிடம் அவர்களுக்கும் ரிக்கற் எடுத்துவருவதாக அந்த நபர் பணத்தைப் பெற்றுச் சென்றாராம். நேரம் தாமதமாகியும் அந்த நபர் வராததைத் தொடர்ந்து நிலைமையை அறிந்து வருவதாகக் கூறி மற்ற நபரும் போய், கம்பிநீட்டிவிட்டார்.

## பஸ் விபத்தில் 11 பேர் மரணம்

லிமா, மார்ச் 11

லிமாவுக்கருகிலுள்ளடிங்கோமரியா என்னுமிடத்தில் ஏற்பட்ட பஸ விபத்தொன்றில், 11 பேர் மரணமானார்கள். 25 பேர் காயமடைந்தனர்.

## துருவ மண்டலத்தில் நகரமைப்பு

மாஸ்கோ, மார்ச் 11

துருவ மண்டலத்திலுள்ள யாகுட்ஸ் குடியரசில் புதிய நகரம் ஒன்றை அமைக்க ரஷ்யா தீர்மானித்திருக்கிறது. இதற்கு ஆல்மாஸாகிராட் எனப் பெயரிடப்படும்.

## என்ஜினுக்கு விவேகானந்தர் நாமம்

கல்கத்தா, மார்ச் 11

சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலையில் முதலில் தயாரிக்கப்பட்ட பிரயாணிகள் ரயில் என்ஜினுக்கு சுவாமி விவேகானந்தரின் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

## புனிதத்தை பாதுகாக்க பிரதமா வேண்டுகோள்

களனி, செவ்வாய்

நேற்றைய தினம் களனி புனித காரணமாகப் பிரதமரால் பிரகடனம் செய்யப்பட்டது. களனி ராஜ மகா விகாரையில் இதைத் தொடர்ந்து விசேட பூசைகளும், பொதுக் கூட்டமும் நடைபெற்றன. விகாரையின் முற்றத்திற்கும் பிரதமர் நேற்றைய தினம் அடிக்கல் நாட்டினார்.

களனியைப் புனித நகரமாக்கும் திட்டத்தின் முதற் பாக வேலைகள் நேற்றுப் பிரதமரால் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இத்திட்டத்திற்கு 17 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் பாக வேலைகளுக்கு 750,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நேற்றைய வைபவத்தின் பின்னர் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில், தனது கணவன் வகுத்த திட்டத்தைத் தான் ஆரம்பித்து வைப்பதில் சந்தோஷம் அடைவதாகக் குறிப்பிட்டார். களனி நகரத்தை காப்பாற்ற விக்கிரமாதேவி தியாகம் செய்தது போல மக்களும் களனியைப் பாதுகாத்து புனிதத் தன்மையை உண்டாக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## 'ஒரு முறை மட்டும் பிரசுரிக்குக'

கொழும்பு, செவ்வாய்

தொலைபேசி குறிப்பேட்டை, ஒரு வருடத்தில் இருமுறை வெளியாகும் பழசகத்தைக் கைவிடுவாறு அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்கம் தபால் மராமத்து அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லையைக் கேட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் குறிப்பேட்டை அச்சிடுவதற்கு அரசாங்கம் 2,25,000 ரூபா செலவிடுவதாகவும் ஜனவரியில் ஒன்றும் ஜூலையில் மற்றொன்றும் வெளிவர இருந்தபோதிலும் அவை தாமதித்தே வெளிவருவதாகவும் தெரிவித்துள்ளனர். குறிப்பேடுகள் அச்சிட்டு வெளியாவதற்கிடையில் தொலைபேசி பாவனையாளர்கள் பெயரும் இலக்கமும் மாற்றமடைந்துவிடுவதாகவும் மந்திரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மணி வாக்கு

மாற்ருனின் கருத்து கெட்டதென்றும் நமது கருத்தே நல்லதென்றும், நம்மைவிட வேறு கருத்துக்கொண்டவர்களை தேசத் துரோகிகள் என்றும் கூறுவது கெட்ட பழக்கமாகும்.

—மகாத்ம காந்தி.

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 29 உ (13-3-63)

## வீடுகள்

அதிகச் செலவிலே ஆடம்பரமான அரசாங்கக் கட்டடங்களைக் கட்டப்படாதென்று நிதி மந்திரி உத்தரவு போட்டுள்ளாராம். கூடுமானவரை உள்நாட்டில் கிடைக்கும் தளவாடங்களையே பாவிக்கவேண்டுமென்றும் அவர் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த உத்தரவுகளை பல வருடங்களுக்கு முன்பாகவே போட்டிருக்க வேண்டும்.

பொது மக்களி பலர்ல்குடியிருக்க வீடின்றி மிகவும் சங்கடப்படுகின்ருர்கள். ஜனத்தொகை அதிகரித்துவருகிறது. கிராமப்புறங்களில் வேலை கிடைக்காததால், பலர் நகரங்களுக்கு வேலை தேடிச் செல்லுகின்றனர். இதனல் நகர்ப்புறங்களிலே வீடுகளுக்கான நெருக்கடி அதிகரிப்பதுடன், வீடு கட்டுவதற்கான நில விலையும் பன்மடங்கு உயருகின்றது. பெரிய பெரிய கட்டடங்களை அரசாங்கம் கட்டுவதாயின், பொது மக்களுக்கான வீடுகள் கட்டப்படுவது பாதிக்கப்படும். பெரிய கட்டடங்களை அரசாங்கம் மட்டுமன்றி, மற்றவர்களும், அத்தியாவசியமில்லாவிடில், கட்டுவதற்குத் தடைவிதிப்பது நல்லது. பொது மக்களின் தேவைக்கான வீடுகளைக் கட்டுவதற்கே முதல் சலுகை அளிப்பதுடன், அதற்கு எல்லாவித வசதிகளையும் செய்துகொடுப்பது அரசாங்கத்தின் முதல் கடமை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, குடியேற்றக்காரருக்காக, கட்டப்பட்ட பல வீடுகள், மனிதர்கள் வசிக்கத் தகுதியற்றுப் போய்விட்டனவாம். அவை சரிவர கட்டப்படாததுடன், மரங்களெல்லாம் உளுத்துப்போய்விட்டதாயும், இவை தனிப்பட்ட 'கண்டிராக்ட்' ஒப்பந்தக்காரர்களால் கட்டப்பட்ட வீடுகள் என்றும் தனிப்பட்ட கண்டிராக்ட் முறை நாட்டின் அபிவிருத்தி வேலைக்குத் தடையாக இருப்பதால் இனி இம்முறையை அடியோடு ஒழித்து விடப்போவதாகவும் மந்திரி ஒருவர் கூறுகின்ருர். 12 வருடங்களுக்குள்ளாக புதிய வீடுகள் பயனற்றுப் போவதாயின் அது மிக மோசம். கைலஞ்சமும், ஊழல்களும் மலிந்துவிட்டதே இதற்கு முக்கிய காரணம். இக்காரணத்தை நீக்க, தீவிரமான நடவடிக்கை எடுப்பதுடன் தனிப்பட்டவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிலே தங்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொள்ள அரசாங்கம் எல்லா வசதிகளையும் செய்துகொடுப்பது மிக வரவேற்கத்தக்கதாகும்.

# கொலை, களவு பெருகுவதேன்?

—மு. சண்முகன்—

எம் நாட்டில் எவ்வாறு ஆண்டுதோறும் கொலை, களவு போன்ற பாதகங்கள் பெருகி வருகின்றன என்பதனைச்சில தினங்களுக்கு முன் வெளியான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் ஆண்டறிக்கை தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளது. நாகரிகத்தில் தினமும் நாம் வளர்ச்சி அடைந்துகொண்டு வருகின்ற பொழுது சமூகத்திலே இப்படியான இழி செயல்கள் பெருகிக்கொண்டு வருவதும் விந்தையே. இருப்பினும், இப்படியான செயல்கள் ஏன் சமூகத்தில் இடம் பெறுகின்றன, ஏன் அவை பெருகி வருகின்றன என்பதற்கான அடிப்படைக் காரணங்களை நாம் இங்கு சற்றுக் கவனிக்கவேண்டும்.

### அடிப்படைக் காரணம்

நாட்டிலே சனத்தொகை பெருகிக்கொண்டு வருகின்றது; அதற்கேற்ற வகையில் வேலை வாய்ப்புக்கள் கிடைக்காமல் போவதனல் மனிதர் இப்படியான இழி செயல்களில் இறங்குகின்றனர் என ஒரு சாரார் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். தன் வாழ்க்கையைச் செவ்வனே நடாத்த முடியாத ஒருவன் தான் வாழ்வதற்காக களவெடுக்க எத்தனிக்கவேண்டியநிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்படுகின்ருன் என்பது அவர்கள் வாதம். களவெடுப்பதற்காகவே கொலைகளும் நிகழ்கின்றன என்பது அச்சாராரின் அபிப்பிராயம். ஆனல் இப்படியான அடிப்படையற்றவை என்பதனை நாம் முதலிலேயே தெளிவுப்படுத்திக் கொள்ளவேண்டும். சனத்தொகை பெருகிக்கொண்டிருக்கின்றபொழுதிலும் வேலைக்கு பல தருணங்களுண்டு. ஆனல் எல்லா வேலைகளையும் ஏற்றுச் செய்வதற்கு இக்கால இளைஞர் மறுப்பதனல், அவர்கள் தம் வாழ்க்கையை நடாத்தக் குறுக்கு வழிகளை நாடவேண்டியிருக்கின்றது. ஓரளவு கல்வி கற்ற இளைஞர் 'பெரிய' உத்தியோகம் பார்க்க எண்ணுவதும் சமம் போன்ற வேலைகளை மேற்கொள்ள தயங்குவதுமே இன்றைய வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முக்கிய காரணம் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. இப்படியாக சிறிய எழிய வேலை செய்யத் தயங்குவோர் வேலையின்றித் தெருவோரங்களில் நின்று, கெட்ட சகவாசத்துக்குள்ளாகின்றனர். இக்காரணத்தால் அவர்கள் வாழ்க்கையிலே திசை மாறுகிறது.

### கசிப்பு, கஞ்சா

கெட்ட சகவாசத்துக்குள்ளாகவே மது, கஞ்சா போன்ற அரக்கர்களுக்கு அவர்கள் அடிமைகளாகி அறிவிலிகளாகி விடுகின்றனர். அறிவிழந்தவர்கள் அநியாயமான செயல்களில் ஈடுபட்டு கொலை முதலிய பாதகங்களைச் செய்வதில் வியப்பொன்றுமில்லை. ஆனல் இக்குற்றங்களைச் செய்த பின்னர் தான் இவர்கள் தங்கள் குற்றங்களை எண்ணி வருந்துகின்றனர். ஆனல் பயன் ஏது? ஆகையினல் சமூகத்தில் இப்படியான செயல்கள் இன்னும் இடம் பெறுவதற்கு சமூக அமைப்பே, மக்கள் மனப்பான்மையே முக்கிய காரணமாகும். தொழில் எதுவானலும் சரி, அதனை வெட்கமெதுவுமின்றி மேற்கொண்டு தன் வாழ்க்கையைக் கண்ணியமான முறையில் நடாத்த எல்லோரும் கங்கணங்கட்டினல் எமது சமுதாயம் உலகத்திற்கே வழிகாட்டியாக அமையலாம்.

பொருளாதார நிலைமையே இப்படியான களவுகளும் கொலைகளும் நடைபெறுவதற்கு அடிப்படைக் காரணம் என்பதனைப் பொலிஸ் அறிக்கை அறிவுறுத்தியிருப்பதனையும் நாம் கவனிக்கவேண்டும்.

### கத்திக்குத்து கூடுகிறது

கசிப்புப் போன்ற கள்ளத்தனமாக வடிக்கப்படும் மது, இழி செயல்களுக்கெல்லாம் காரணமெனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். இவ்வகைக் குடிவகை மிகவும் மலிவாகக் கிடைப்பதனல் அதனை அருந்தி இன்பம் காண விரும்புவோர் தம்மை மறந்து தமுள்ளே பதுங்கி இருக்கும் கெட்ட, மனிதன் வெளித்தோன்ற இடம் கொடுத்துவிடுகின்றனர். கத்திக்குத்து 1960-ம் ஆண்டிலும் பார்க்க 1961-ம் ஆண்டில் பெருமளவு பெருகியுள்ளது என்பதனைப் பொலிஸ் அறிக்கை புலனக்கியுள்ளது. 1960-ல் 3610 பேர் கத்திக்குத்துக்குள்ளாகியுள்ளனர். ஆனல் ஓராண்டு பூர்த்தியாவதற்குள் இத்தொகை நூறினல் பெருகியுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் கசிப்பேயென முடிவு கட்டப்பட்டுள்ளது. ஆகவே கொலையையும் களவையும் ஒழிக்க முன் கசிப்பை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வெண்டும். இதற்குப் பொலிசார் மட்டும் கடும் நடவடிக்கைகள் எடுத்தால் போதாது. பொதுமக்களும் இக்கசிப்புத் தொல்லையை ஒழிகக ஒத்துழைக்க வேண்டும்.

### சூதாட்டம்

சூதாட்டமும், கொலைகளுக்கும் சிறு சண்டைகளுக்கும் காரணமாயிருககும் கர்த்தாக்களில் ஒன்ருகும். சோம்பல் தனமும், வேலையில்லாத் திண்டாட்டமுமே மககளை சூதாட்டத்தில் ஈடுபடத் தூண்டுகின்றது. நேரத்தைச் கடத்த எணணிச் சூதாட்டத்தில் இறங்கும்வார், கடைசியில் பணம் வைத்து சூதாடிச் கைகலப்பில் மட்டுமின்றி கத்திக் குத்திலும் முடிவர் என்பதனை நாம் கண்ணரக் கண்டுள்ளோம். 1961-ல் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்ட சூதாடிய 688 பேரிலும் பார்க்க 1961-ல் இத்தொகை 1867 ஆககூடியுள்ளது. இவ்விளையாட்டினல் சமூகத்தில் ஏற்படும் வினையை நாம் இக்கூடுதலான தொகையிலிருந்து அறிந்துகொள்ளலாம். இத்துறையிலும் இந்த இழி செயலை சமூகத்திலிருந்து அகற்ற பொலிஸாரிலும் பார்ககப் பொதுமக்கள் எவ்வளவோ ஒத்துழைககலாம்.

### பொதுமக்கள் பங்கு

பெரிய களவுகளிலும் பார்கக சயிக்கிள் களவு போன்ற சிறிய களவுகளே 1961-ல் பெரிதளவு இடம்பெற்றது' என பொலிஸ் அறிக்கை கூறுகிறது. இப்படியான சிறு களவுகள் நடைபெறுவதற்குப் பொதுமக்களே பெரிதும் பொறுப்பாளியானவர்கள். அவர்கள் சிறிது அக்கறையுடனும் கவனத்துடனும் இருப்பின் கள்வர்களுக்குக்கூடப் பிழைப்பின்றி அவர்கள் இவ் இழிதொழிலைக் கைவிடவேண்டிநேரிடும்.

சமூகத்திற்குத் தீங்கு விளைப்பவர்கள் பலர் இருந்தும் அவர்களைக் காட்டிக்கொடுத்துத் தண்டனை வேண்டிக்கொடுக்கப்பலர் பயப்படுகின்றனர். தாம் அவர்களைக் காட்டிக்கொடுப்பின் தமக்கே அவர்கள் இயமனை வந்துமுடிவார்களோ என்ற பயம் அவர்களைத் தடைசெய்வதனல் இச் சமுதாயப் புல்லுருவிகள் சமுதாயத்தில் திளைத்து சுரண்டி வாழ்ந்து சமுதாயத்திற்கே தீங்கிளைக்கின்றனர். இப்படி எல்லாரும் பயந்திருப்பின் சமூகம் முன்னேறமுடியாது. குற்றம்செய்தவர் தண்டிக்கப்பட வேண்டுமாதலினலும் சமூகம் முன்னேற வேண்டுமாதலாலும் சமூகத்திலுள்ள கெட்டவர்கள் முக்கியமாக அகற்றப்படல் வேண்டும்.

## 'சிங்கள விஞ்ஞான இயக்கம்'

### கே. எம். பி நடத்துவாரா?

கொழும்பு, செவ்வாய் நாடு பூராவும் உள்ள சகல பாடசாலைகளிலும் சிங்களம் மூலம் விஞ்ஞானம் போதிக்கப்படவேண்டும என்ற இயக்கத்தை திரு. கே. எம். பி. ராஜரத்தின ஆரம்பிக்கவிருக்கிருர். ஹைட்பார்க்கில் நடைபெற்ற கூடடம் ஒன்றில் பேசும் பொழுது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

சிங்களத்தை அரசாங்க மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் சிங்களத்தில் விஞ்ஞானத்தைப் போதிப்பதற்குமட்டும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வினவிய அவர சமஷ்டிக் கட்சியினரும், கத்தோலிக்கர்களும் சிங்களம் மூலம் விஞ்ஞானம் போதிப்பதற்கு இரகசியமாகத் தடைத் திட்டங்கள் வகுத்துவருகிருர்கள் என்றும் குறிப்பிட்டார்.

சிங்களம் மூலம் விஞ்ஞானம் போதிப்பதற்காக தமது கட்சி, ஒரு இயக்கத்தை ஆரம்பித்து சகல பாடசாலைகளையும் கட்டாயப்படுத்தலாம் என அவர் தெரிவித்தார்.

## ஐயாறன் எழுதுவது

கதிர்காமத்திலுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்திருப்பதை முன்னள்பிரதமர் தகநாயக்கா பகிரங்கமாகக் கண்டித்துள்ளார். இது யாத்திரிகர்களின் உரிமையை நசுக்குவதாகுமென்றும் இவ்வித முட்டாள்தனத்தில் இறங்காதிருக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரும் சிங்களவரும் சேர்ந்தே அந்த மடத்தைக் கட்டியுள்ளனர். இருசமூகங்களின் மேலான ஒத்துழைப்புக்கு அந்த மடம் ஓர் அத்தாட்சியாகும். மடத்தின் ஒவ்வொரு அறைக்கு முன்பும், அதைக்கட்ட உதவியவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இன்று கதிர்காமத்தில் இரு சமூக யாத்திரீகருக்கும் மேலான சமூகத் தொண்டு செய்துவரும் இந்தப் புனித ஸ்தாபனத்தை அகற்ற வேண்டாமென்று சிங்கள பௌத்தர்களே பகிரங்கமாகக் கேட்பது வரவேற்கத்தக்கது.

காலியில் நடந்த சுவாமி விவேகானந்தரின் நூற்ருண்டு விழாக் கூட்டத்தில் தான் மாஜிப்பிரதமர் இப்படிச் சொன்னர். அதே கூட்டத்தில் உணவு வர்த்தக அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசியும் கலந்து கொண்டிருக்கிருர். அரசாங்கம் இவ்விஷயமாக அவசரப்பட்டு முட்டாள்தனமாக நடந்து யாத்திரீகர் உரிமைகளை நசுக்காதென்று எதிர்பார்க்கலாமா?

* * *

'இங்கு கொசுத் தொல்லை தாஙக முடியவில்லை இரவிலே நீங்கள் எப்படித்தான் தூங்குகிறீர்களோ?' என்று ஓரன்பர் வந்து கேட்டார். கொசுவுக்காக ஸ்பெஷல் 'ஊதுபத்தி'யைக் கொளுத்தி புகை போட்டு, படுக்க வேண்டியுள்ளதாம். மனிதனையும்படைத்து அவனை இப்படி உபச்சிரவம் செய்யும்படி கொசுவையும் ஏன் படைத்தான் இறைவன் என்று அந்த அன்பர் கேட்கின்ருர்.

ஆனல் இதைவிட தமிழ் நாட்டிலே கும்பகோணம் கொசு மிகவும் பிரசித்தம். யானைக்கால் உபாதியும் அங்கு பலருக்குண்டு. சில வருடங்களுக்கு முன யானைக்கால் உபாதியுள்ளவர்களெல்லாரும் சேர்ந்து, நகரில் ஊர்வலமாக வந்து நகரசபைமுன் கொசுத் தொல்லையை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். பின்னர் அந்தச்சபையினர் ஒரு நிபுணரை வரவழைத்து, தீவிரமாகக் கொசுவை எதிர்த்து 'யுத்தம்' நடத்தி, அந்தத் தொல்லையை வெகுவாக அடக்கிவிட்டனராம்.

சிலமாதங்களுக்கு முன் ஒரு நாள் யாழ்ப்பாண மாநகர சபையைச் சேர்ந்த ஒருசிப்பந்தியை நகரபிதா ஒருவர் அழைத்துவந்து பலவீடுகளிலும் மருந்து தெளிக்கச் செய்தார். ஆனல் இதைப்பற்றி நமது 'கொசுக்கள்' சற்றும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தத் தொல்லையைத் தீர்க்க ஊரெல்லாம் பெரிய இயக்கம் நடத்த வேண்டும். மாநகர சபையுடன் பொதுமக்களும் ஒத்துழைத்து இந்தத் தொல்லையை நீக்க எல்லா முயற்சியும் எடுத்தால் இங்கு இந்தத் தொல்லை அடங்கக்கூடும். பொதுமக்கள் தங்கள் வீட்டைச்சுற்றியும் சுத்தமாகவைத்துக் கொள்ள வேண்டும். நம் வீடு சுத்தமாக இருந்து, பக்கத்து வீடு அசுத்தமாக இருந்தாலும், அங்கிருந்து கொசுக்கள் தடையின்றி நம்வீட்டுக்கும் வந்துவிடும். ஆகவே ஊரெங்கும் "கொசு எதிர்ப்பு மாதம் அல்லது வருடம்"

(5-ம் பக்கம் பார்க்க)

# "கல்வியைத் திணித்தால் உளவளர்ச்சி கெட்டுவிடும்"

## கல்லூரி அதிபர் கருத்து

மாவிட்டபுரம், செவ்வாய்

மாணவர்களின் இயல்பான திறமைக்கு முரணைக் கல்வியைத் திணிக்க முயன்றால் அவர்களுடைய உளவளர்ச்சி தடைப்பட்டுவிடும் என்று காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. க. கிருஷ்ணபிள்ளை நேற்றுமாலை நடைபெற்ற கல்லூரி பெற்றார் தின பரிசளிப்புவிழாவில் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப்பேசுகையில் குறிப்பிட்டார். அதிபர் தமது அறிக்கையில் கல்லூரியின் வளர்ச்சி பற்றி விளக்கிக் கூறிவிட்டு மேலும் குறிப்பிட்டதாவது:-

பிள்ளைகளின் இயல்பான விவேகத்தையும் திறமையையும் எம்மால் இயன்றளவு கணித்து அதற்கு ஏற்றபடி கல்வி அளிக்கவேண்டியது எம்மைச் சார்ந்து நிற்கும் பெரும் பொறுப்பாகும். மாணவருடைய இயல்பான திறமைக்கு முரணைக் கல்வியைத் திணிக்கமுயன்றால் அவர்களுடைய உளவளர்ச்சி தடைப்பட்டுவிடும் என்பதை நாங்கள் எல்லோரும் உணர்தல்வேண்டும். இதில் பெற்றார் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும்.

மாணவர்களுடையஉளவளர்ச்சி, உடல்வளர்ச்சி சமயப்பற்று ஆகியவைகளை அடிப்படையாகக்கொண்டே நாம் கல்விபுகட்டி வருகின்றோம். இன்றைய உலகில் விஞ்ஞானக்கல்வி முதலிடம் பெறுகின்றது. இதுநாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. ஆனால் அதே நேரத்தில் எங்கள் பண்பாட்டையும் சமயத்தையும் நாம் தழுவியே செல்லவேண்டும். பெருந்தொகையான மாணவர்களைக் கண்காணிப்பது எங்களுக்குப் பெரும் பொறுப்பாக இருக்கின்றது. கல்லூரி நடக்கின்ற எட்டுமணி நேரமும் நாங்கள் மாணவர்களை நன்கு அவதானித்து அவர்களை நல்வழிப்படுத்த முயற்சி எடுத்துவருகின்றோம். ஒருநாளில் எஞ்சிய பதினாறு மணிநேரத்தையும் மாணவர்கள், வீட்டிலேயே கழிக்கின்றார்கள். எனவே பெற்றோர் அவர்களுடைய பிள்ளைகளை நன்கு மேற்பார்வை செய்து, எம்முடன் ஒத்துழைத்து அவர்களை நற்பிரசைகளாக்கவேண்டுமென்றார்.

---

## முற்போக்கு எழுத்தாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் இரண்டாவது மகாநாடு கலைஇலக்கியப் பெருவிழாவாக நடத்தப்படவிருக்கிறது.

ஏப்ரல் மாதம் 6-ம், 7-ந் திகதிகளில் இவ்விழா நிகழவிருக்கிறது. பருத்தித் துறையிலுள்ள யாழ்ப்பாணத்துச்சாமியார் சமாதி முன்றலிலும் யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலும் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் இலக்கியப் பெரியார்கள் கௌரவிக்கப்படவிருப்பதோடு, இலங்கையர்கோன் ஞாபகார்த்தமாக அவரது உருவப்படமும் திரைநீக்கஞ்செய்யப்படவிருக்கிறது. அறிஞர்களின் சொற்பொழிவுகளும், கவியரங்கு, இசையரங்கு, நாடகம் என்பனவும் இவ்விழாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

---

## சமாதான அணி

லக்ஷ்மணபுரி, மார்ச் 12

புதுடில்லியிலிருந்து பீக்கிங்கிற்குச் சென்றுகொண்டிருக்கும் சமாதான யாத்திரை அணி நேற்று லக்ஷ்மணபுரிக்கு வந்து சேர்ந்தது.

---

## கொழும்புத்துறை முகத்திற்கு ஐ. நா. உதவி

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு துறைமுகத்தில் எண்ணெய் இறக்குவதற்குப் புதிய இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பொறியியல், மதிப்பீட்டு வேலைகளை செய்வதற்கு ஐ. நா. விசேஷ நிதியிலிருந்து 555,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை அரசாங்கம் 110,000 ரூபா தனது பணத்திலிருந்து ஒதுக்கியுள்ளது.

இப்பொழுது எண்ணெய் இறக்குவதற்கான இறங்குதுறை கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தகப்பகுதியின் மத்தியில் இருக்கிறது. இந்தத் துறை முகத்தில் பெரிய எண்ணெய்த் தாங்கிகளை இறக்குவது பெரிய கஷ்டமாயிருப்பதுடன் தாமதமும் ஏற்படுகிறது. இலங்கைக்கு இப்பொழுது தேவையான எண்ணெய்ப் பொருள்களுடன் ஒப்பிடும் போது 1970-ல் 50 க்கு 80 சத வீதம் தேவைப்படும். எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலையும் நிறுவப்படவிருப்பதால் சிறந்த இறங்குதுறையொன்று அவசியமென்றும் அது இப்பொழுதுள்ள இடத்திலிருந்து வேறு இடத்தில் அமைக்கப்படவேண்டும் என்றும் 1961-ம் ஆண்டில் நிபுணர் குழு சிபார்சு செய்திருக்கிறது.

---

## விவேகானந்தர் நூற்றாண்டு விழா

### ஒழுங்குகள் செய்ய ஆலோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவை யாழ்ப்பாணத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் பற்றி ஆராய்வதற்காக இம் மாதம் 15-ந்திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஒரு கூட்டம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கூட்டத்தில் ராமகிருஷ்ண மிசன் இலங்கைக் கிளை உப தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தயும் கலந்து கொள்வார்.

உலகின் பலபாகத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் விவேகானந்தர் நூற்றாண்டு விழாவை, அவர் மேற்கு நாடுகளிலிருந்து திரும்பும் பொழுது அவருக்கு பிரமாண்டமான உபசாரமளித்த யாழ்ப்பாணம் வெகுசிறப்பாக கொண்டாடுவது அவசியம் என இக்கூட்டத்தைக்கூட்டும் திரு. ச. அம்பிகைபாகன் தெரிவித்துள்ளார்.

---

## யுகோ.அங்கீகாரம்

லண்டன், மார்ச் 11

புதிய ஸிரியா அரசாங்கத்தை யுகோஸ்லேவியா அங்கீகரித்திருப்பதாக நேற்று பெய்ரோ வானொலி அறிவித்தது.

---

## ஐயா றன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திப் பெரும் போர் புரியவேண்டும். நமது மாநகர பிதாக்கள் இதில் சற்றே கவனம் திருப்புவார்களா?

* * *

பற்பல் காலம் பயிற்றிப்
பரமனைச்
சொற்பல் காலம் நின்றேத்
தும்மின் தொல்வினை
வெற்பில் தோன்றிய வெங்
கதிர் கண்ட அப்
புற்பனிக்கெடு மாறது
போலுமே.

— திருநாவுக்கரசர்

---

## வடமாகாணத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயப் பற்றுக்குறை ஏற்படாதென்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தொகையும் குறையும் எனவும் நம்பப்படுகிறது. எனவே விளைந்த வெங்காயத்தைப் பாதுகாத்து வைப்பதற்கு விவசாய அமைச்சு சிலதிட்டங்களை வகுத்துள்ளது. அவற்றில் சில பின்வருமாறு:

யாழ்ப்பாணம், வவுனியா, கல்பிட்டியா ஆகிய இடங்களில் பிரதான வெங்காயச் செய்கைக் காலத்தில் உற்பத்தியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதும் அவற்றைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், ஐக்கியபண்டகசாலைகளும் பாதுகாப்பாக வைக்க ஒழுங்கு செய்வதும்.

டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையான காலத்தில் வெங்காயப் பற்றுக்குறை ஏற்படும் என்று விரிந்த அளவில் குடும்பப் பெண்கள் மத்தியில் பிரசாரம் செய்வதும், அவர்களை செப்டம்பரில் கிடைக்கக் கூடிய வெங்காயத்தை பாதுகாத்து வைக்கும்படியும் தூண்டுதல்.

சிறந்த பாகாப்பு வசதிகளைச் செய்து ஒரு நிர்ணய விலையில் விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தை வாங்குவது. இப்படிப் பாதுகாத்து வைப்பதால் பற்றுக்குறை ஏற்படும் காலங்களில் இருப்பிலிருந்து எடுத்து விநியோகம் செய்தல்.

---

## சீன-இந்திய பேச்சு:...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எல்லைத்தகராறை சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லலாமென்ற தமதுபழைய யோசனையையும் பிரதமர்நேரு தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

## "வாக்குறுதியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது. தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சனை அரசியலை நோக்கியே உள்ளது. இந்த நாட்டிலுள்ள தமிழ்ப் பேசும் மக்களைப் பாதிக்கக் கூடிய விஷயங்களைப் பற்றிப் பேசுவது நல்லது தமிழ்ப் பேசும் மக்களை ஏமாற்றி, தவறான பாதையில் சில சிங்களவர்கள், இலங்கைத் தமிழ் மக்களை சிங்கள மக்களாக்க முயற்சிக்கின்றனர். இத்தகைய முயற்சிகளை முறியடிப்பது நமது தலையாய கடமையாகும். தற்போதைய எமது நிலை பாதிக்கப்பட்டதாகவே உள்ளது. எனினும் இந்த நிலைமை நீடிக்காது.

நமக்கும் நல்ல காலம் வரும். அதற்காக நாம் இப்போதே தயாராகவேண்டும்.

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத் தேர்தல் முடிந்தபின் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தைத் தோற்றுவிக்கும் நிலையில் இருந்தது. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சமனான பலமுடையவையாக இருந்தமையால் ஐக்கியதேசியக் கட்சி தான் அரசாங்கம் அமைக்க எமது உதவியை நாடியது. இதே நேரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மொழியுரிமை உட்பட சில விஷயங்களுக்கு எம்முடன் உடன்பாடு செய்து கொண்டது. இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி முறியடிக்கப்பட்டது.

சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைக் கைப்பற்றியதுடன் எம்முடன் செய்துகொண்ட உடன்பாடுகளை மீறி மாறாக நடக்க ஆரம்பித்தது. இவர்களின் இந்த நடவடிக்கைக்கு தெய்வத் தீர்ப்பு கிடைத்தே தீரும்!

அது வரையும் நாம் நமது கொள்கையிலிருந்து பிறழாமல் திடமாக இருந்து நமது உரிமைகளைப் பெறவேண்டும்.

---

வடபகுதி அசைஸ்விசாரணை

## "கத்தி பொலிசில் இருப்பதாக சார்ஜன்ட் சொன்னார்"

### வவுனியா கொலைவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் வவுனியா கொலைவழக்கு நேற்றுக்காலை நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சாட்சியாகிய ஐயாத்துரையை எதிரியின் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம் குறுக்குவிசாரணை செய்தார்.

எந்தத் தருணத்திலாவது எதிரியின் கையில் கத்தியை காணவில்லையென்றும், கடையிலிருந்து எதிரிஓடிவரும்போது கையில் கத்தியைக் காணவில்லையென்றும், சண்டைமுடிந்த பின்பும் எதிரியின் கையில் கத்தியைக் காணவில்லையென்றும் குறுக்கு விசாரணையின் போது ஐயாத்துரை கூறினார்.

சம்பவத்தை நேரில் கண்டதாகக்கூறும் ஐயாத்துரை சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

சம்பவம் நடந்தஅன்று யூசுப் கடையில் நானும், பாக்கியநாதனும், யூசுப்பும், குட்டித் தம்பியும் வேட்டைக்குப் போவதற்காகக் காரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது எதிரி சேனதிராசா உள்ளே வந்தார். அச்சமயம் நான் 'பகவதி ஹோட்டலுக்கு' தேநீர் குடிக்கச் சென்றுவிட்டேன். திரும்பிவரும்போது பாக்கியநாதன் தனது கைக் கடிகாரத்தை என்னிடம் தந்து, எதிரி அனுவசியமாகச்சண்டைக்கு அழைப்பதாகக் கூறினார். அவரிடமிருந்து ஒரு கத்தியை எடுத்துக்கொண்டேன். கடைக்கு வெளியில்வந்து இருவரும் சண்டைபிடிக்கவில்லை. எதிரி சந்தைப்பக்கம் சென்றுவிட்டார். பின் சேனதிராசா வந்து 15 நிமிஷம் சண்டைபிடித்த பின் சென்றுவிட்டார்.

அதன்பின் செட்டியார்வந்து, சேனதியை எதற்காக அடித்ததாக பாக்கியநாதனை கேட்டார். எனக்கு அவன்பெயர் தெரியாது கீழ்கோர்ட்டில்அதர் 2-வது எதிரியாக இருந்தார். உடனே பாக்கியநாதன் ஒரு சயிக்கிளை எடுத்து செட்டியாரை தாக்கினார். செட்டியார் கீழே விழுந்தார். பாக்கியநாதன் றோட்டுப்பக்கம் வந்ததும், செட்டியாரின் தம்பி ஓடிவந்து பாக்கியநாதனை பின்னால் பிடித்தார். அப்பொழுது யூசுப் கடைக்கு முன்னால்நின்ற எதிரி, கையை உயர்த்திக்கொண்டு தாக்க ஓடினார். சிறிது நேரத்தில் செட்டியாரின் தம்பி கீழே விழுந்தார். இந்த நேரத்தில் எதிரியும் பாக்கியநாதனும் கட்டிப்புரண்டார்கள். 'ஐயோ', 'ஐயோ', என்று பாக்கியநாதன் சத்தம்போட்டார். நான் போய் சேனதிராசாவின் கையை இழுத்தபோது இருவரும் எழும்பினார்கள். அப்பொழுது கத்தி பாக்கியநாதன் கையில் இருந்தது. எதிரி சந்தைப்பக்கம் போனார். பாக்கிநாதன் பொலிசுக்கு போனார்.

எதிரியின் வழக்கறிஞர் திரு. பாலசுந்தரம் ஐயாத்துரையை குறுக்குவிசாரணை செய்தார்.

வழக்:- வரதராசா செட்டியார் பாக்கியநாதனை பின்னால் பிடித்தபோது, வெங்கடாசலம் செட்டியாரும் பிடித்தாரா?

சாட்சி:- வரதராசா செட்டியார் கீழே விழுந்தபின்தான், வெங்கடாசல செட்டியார் போய் சண்டைபிடித்தார்.

வழக்:- பாக்கிநாதன், எதிரி, வெங்கடலாசல செட்டியார், இறந்தவராகிய வரதராசா செட்டியார் ஆகிய நால்வரும் ஒரே நேரத்தில் சண்டைபிடித்தார்களா?

சாட்சி:- இல்லை.

வழக்:- வரதராசா செட்டியார் முதல் விழுந்தார்.

சாட்சி:- ஆம். அவர் விழுந்தபின் மூவரும் சண்டையிட்டார்கள்.

வழக்:- சம்பவம் நடந்த பொழுது மழை பெய்ததா?

சாட்சி:- அப்பொழுது மழை பெய்யவில்லை.

வழக்:- இறந்தவரை அதற்கு முன் பார்த்தீரா?

சாட்சி:- இல்லை.

வழக்:- கீழ்க்கோர்ட்டில் சகோதரன் விழுந்தபின் செட்டியார் பகவதி ஹோட்டலுக்கு போனார் என்றீரா?

சாட்சி:- இல்லை.

வழக்:- கீழ்க்கோர்ட்டில் பாக்கியநாதன் தம்பி உம்முடன் பொலிசுக்கு வந்தார் என்றீரா?

சாட்சி:- இல்லை.

வழக்:- கீழ் கோர்ட்டில் கந்தசாமி தனது சகோதரன் பாக்கியநாதனுடன் பொலிசுக்குப் போனார் என்று சொல்வது சரியல்ல என்கிறீரா?

சாட்சி:- விளங்கவில்லை.

வழக்:- விளங்கவில்லையென்பது பொய்.

சாட்சி.- இல்லை.

வழக்:- பாக்கியநாதன் பொலிசுக்குப் போனபோது நீர் எங்கே?

சாட்சி:- சம்பவம் நடந்த இடத்தில்.

நீதியரசர்:- பொலிஸ் ஜீப் வந்தபோது அங்கே நின்றீரா?

சாட்சி:- இல்லை.

கந்தையா நடராசா என்னும் 12 வயதுச் சிறுவன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

வவுனியா சந்தையில் என் தகப்பனாரின் கடையில் 4-ம் திகதி இருந்தேன். ஒழுக்கு இருக்கிறபடியால் கடையில் யாரும் படுப்பதில்லை. அன்று 6 மணிக்கு கடையைப் பூட்டினேன். என்னுடன் உதவிக்கு வேறொருவர் இருந்தார். மறு நாள் கடையில் வாழைப்பழம் வெட்டக் கத்தியைத் தேடிய போது காணவில்லை. எங்கள் கடையிலுள்ள கத்தி வெள்ளைப் பிடியுள்ளது.

பாலசுந்தரம்:-மற்றக் கடைகளிலும் இப்படி பிடியுள்ள கத்தி இருக்கிறதா?

சாட்சி:- ஆம்.

பால:- நீர் ஏன் படிப்பதை நிறுத்தினீர்?

சாட்சி:- படிக்கமுடியாமலிருந்தது.

பால:- பகவதி ஹோட்டல் ஆட்கள் உமது கடையில் வாழைப்பழம் வாங்குவதில்லையா?

சாட்சி:- இல்லை.

பால:- கீழ்கோர்ட்டில் பகவதி ஹோட்டல் ஆட்கள், எங்கள் கடையில் பழம் வாங்குவது வழக்கம் என்றீரா?

சாட்சி:- நான் அப்படிச் சொல்லவில்லை.

பால:- எந்த நேரத்தில் கத்தி காணவில்லையென்று தெரியவந்தது?

சாட்சி:- சார்ஜன்ட் குருசாமி கடைக்கு வந்தபின்பு.

பால:-உங்கள் கடைக்குவந்த சார்ஜன்ட்.உங்கள கத்தி பொலிசில் இருப்பதாகச் சொன்னாரா?

சாட்சி:- ஆம்.

பால:- அதன்பின்தான் கத்தியைத் தேடினீர்கள்?

சாட்சி:- ஆம்.

பால:- கீழ்கோர்ட்டில், கத்தியைக் காணாதபடியால், வேறொரு கத்தி வாங்கினதாகச் சொன்னீரா?

சாட்சி:- இல்லை.

பால:- பொலிசுக்கு போனதும் பயப்பட்டீரா?

சாட்சி:- இல்லை.

மேல் விசாரணை இன்று காலைவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

நியுயோர்க், மார்ச் 12

சிரியா எல்லையில் இஸ்ரேலியர் அத்துமீறிப் பிரவேசித்து ஆத்திரமூட்டுவதாக சிரியா அரசாங்கம் ஐ. நா. வுக்குப் புகார் செய்துள்ளது.



# மங்கையர் உலகம்

# மனையறமும் மங்கையரும்

— சுந்தரி சபாரத்தினம் —

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

இல்லறம் என்பது அன்பு வாழ்வுக்கு அடிப்படையாய், அருள்நெறிக்கு உறுதுணையாய் விளங்கும் ஒரு உன்னத கலைக்கூடம். இல்லறத்தின் முக்கிய உறுப்பு பெண்ணே. ஆகவே இல்லறத்தின் ஏற்றத்தாழ்வு ஒரு பெண்ணின் கையிலேயேதான் தங்கி இருக்கிறது. ஒவ்வொரு பெண்ணும் தங்கள் மனையறத்தைச் சிறப்பாக்கிக் கொண்டால் உலகமே சிறப்படையும். அப்பெண் அறிவிலும் அன்பிலும் சிறந்து விளங்குவாளேயாயின் அவ்வில்லறம் சிறப்புறும். ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் தங்கள் இல்லங்களை அழகாக வைத்துக் கொள்ள முனையவேண்டும். வீடு சிறியதாக இருந்தாலும் கூட அதனை வைத்திருக்கும் முறையே அ வீட்டின் இல்லாளின் குணத்தை விளக்கிவிடும்.

வீட்டின் அமைப்புக்கும் அளவுக்கும் தகுந்தவாறு, வருவாய்க்கு உகந்ததாக பொருள்களைச் சேகரித்துக்கொள்ள வேண்டும். பணம் இருக்கிறதே என்று கடைப்பொருள் எல்லாம் கொண்டுவந்து வீட்டை நிரப்பிக்கொள்ளல்கூடாது ஒவ்வொரு பெண்ணும் புத்திசாலித்தனமாகவும் கலையுள்ளத்துடனும் பொருள்களை வாங்கி அழகுற வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு மேனாட்டு மாது சேலையுடுத்தி நெற்றிக்குத் திலகம் பூட்டுக் கொண்டால் அது பொருத்தமாக அமைவதில்லை. ஆனால் ஒரு தமிழ்ப்பெண் நிறையப் பூச்சூடி, திலகம் இட்டு, சேலையுடுத்திக்கொண்டால் இயற்கையாகவே, அழகாக இருக்கும் அதேபோல் ஓர் இல்லத்தின் சிறப்பு அவ்வில்லக்கிழத்தியின் கச்சிதத்தினால்தான் பரிமளிக்கிறது.

யன்னல்களுக்குத் திரைகள் போட்டுக்கொள்வது அவசியம். வரவேற்பு ஹாலில் மெத்தை தைத்த நாற்காலிகளை வைத்துக்கொள்ளவேண்டும். வசதியற்றவர்கள் சாதாரண பின்னல் உள்ள நாற்காலிகளுக்குத் தங்கள் கைத்திறனைக் காட்டும் வண்ணம் உறைகளைத் தைத்துப் போட்டுக் கொண்டால் நன்றாக இருக்கும். மத்தியில் சின்ன மேசை போட்டுக்கொள்ள வேண்டும். அநேகமாக எல்லோரும் "ஷோகேஸ்" எனப்படும் கண்ணாடி அலமாரிகளை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவற்றில் வைத்துக்கொள்ளும் பொருள்களைப் பற்றியும் சிறிது கவனம்செலுத்தவேண்டும். பாவிப்பதற்குரிய கண்ணாடி டம்ளர்களையோ, எவர்சில்வர் தம்ளர், தட்டு முதலியனவற்றையோ அவற்றில் வைத்துக்கொள்ளக் கூடாது. அப்படியாக வைத்துக்கொள்வது வியாபாரத்திற்காக அடுக்கிவைத்திருப்பது போல் தோன்றும். இந்த ஷோகேஸ் நமது தற்பெருமையையோ அல்லது சிலசமயம் நமது நாகரிகக்குறைவையும் கூடப் பறைசாற்றிவிடும் ஜாக்கிரதை! சுவர்களில் அத்தாட்சிப் பத்திரங்களை மாட்டிவைப்பது நன்றாயிருக்காது. தேர்ந்தெடுத்த இயற்கைக்காட்சிப் படங்களை நெருக்கமாக இல்லாது மாட்டிவைப்பது சாலச் சிறந்தது.

"படிக்கும்" அறை ஒன்று இருக்கிறதா? உள்ளே வருபவர்களிடம் படிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டி விடக்கூடிய அளவில் அது அமைந்திருக்க வேண்டும். புத்தகங்களை மொழிவாரியாகப் பிரித்து அடுக்கி வைத்திருக்க வேண்டும். அவ்வறையிலேயே படிக்கக்கூடிய வசதியாக ஒரு மேஜை, நாற்காலி, விளக்கு வைத்துக் கொள்ள வேண்டும். புத்தகங்களை மட்டும் இரவல் கொடுத்துவிடாதீர்கள். படுக்கும் அறை அகன்ற யன்னல்களை உடையதாயும், சூரியஒளி விளக்கூடியதாகவும் இருக்க வேண்டும். பாவிக்கும் கட்டில்களுக்கு அடியில் பெட்டிகளையோ பிறபொருட்களையோ வைப்பது கூடாது. கட்டில் விரிப்புகள், தலையணை உறைகள் எந்நேரமும் பளிச்சென்று அழுக்கின்றி இருக்க வேண்டும்.

துணிகளை, படுக்கும் கட்டில்மீதும் மற்றும் பொருள்கள்மீதும் எறிந்து போட்டிருக்கக்கூடாது. அழுக்குத் துணிகளை ஒரு கூடையில் போட்டு ஓரமாக வைத்திருத்தல் நலம். துவைக்கும்போது தேடித் திரியாமல் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும். துவைத்த துணிகளை ஸ்டான்டின்மேல் மடித்துப் போட்டுக் கொள்ள வேண்டும். பார்ப்பவர்களுக்கும் தூய்மையாக விளங்கும்.

ஏழை வசிக்கும் குடியானாலும்சரி, செல்வர் வதியும் மாளிகையானாலும்சரி ஒவ்வொரு வீட்டின் சமையல் அறையும் தூய்மை பரிமளிக்க வேண்டும். சுவரிலேயே அலமாரிகள் வைத்துக் கொள்வதன்மூலம் அறை விசாலமானதாகின்றது. சமையலுக்குத் தேவையான பொருட்களைப் போத்தல்களில் போட்டு வைத்து அவற்றின் பெயரை அதில் எழுதி ஒட்டிவைத்துக் கொண்டால் பாவிப்பவர்களுக்கு எடுக்க கொடுக்க வசதியாக இருக்கும். சமைய முடிந்தபின் எல்லாவற்றையும் ஒழுங்காக வைக்க மறக்கக் கூடாது.

தோட்டம் அமைப்பதில் பெண்களுக்கு அதிக உரிமை இருக்கிறது. ஒருபொழுது போக்காகவும் ஆகிறது. வீட்டிற்கு முன்பாக பூந்தோட்டமும் பின்புறம் காய்கறித் தோட்டமும் அமைத்துக் கொள்ள வேண்டும். எங்களுக்குத் தேவையானவற்றை சிறுஅளவிலாவது உபயோகப் படுத்தக் கூடியதாக இருக்கும். எத்தனை சிறிய வீடானாலும் பூந்தோட்டம் ஒருபுது சோபையை அளிக்கிறது. மேலும் பூந்தோட்டத்தில் நிற்பவன் இறைவனுக்குப் பக்கத்தே நிற்கிறான். ஓய்வு கிடைக்கும் பொழுது சலவைத் துணிகளைப் பார்த்து அவற்றில் இருக்கும் சிறுகிழிசல்களைத் தைத்துக் கொள்ளப் பழக வேண்டும். இதில் சிக்கனமும் பொறுப்புணர்ச்சியும் அடங்கி இருக்கிறது. நல்ல ஒரு துணியும் சிறு கிழிசலுடன் அணிந்தால் முழுவதும் பாழாகிவிடும். அத்துடன் அவசரமாகப் போட்டுக் கொள்ள எடுப்பவர்கள் தைத்து புனிதமாக வைத்திருக்கும் நேர்த்தியைக் கண்டு மனம் பூரித்து விடுவார்கள்.

இங்ஙனம் தன்மனையைச் சீரிய முறையில் பொறுப்புடன் வைத்திருந்தால் எந்த ஒரு பெண்ணும் சோம்பலின்றி சுறுசுறுப்புடனும் மனஅமைதியுடனும் விளங்குவாள் என்பது திண்ணம்.

—

## செய்தித் திரட்டு

### அன்பளிப்பு

திருக்கோணமலை, திங்கள்

இலங்கை ஜனநாயக காங்கிரஸைச் சேர்ந்த திரு. எஸ். நாயுடு என்பவரின் மருகனார் விக்னேஸ்வரர் சிலை ஒன்றை திருக்கோணமலை கோணநாயகராலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

∴ ∴ ∴

### பஸ் சேவை நிறுத்தம்

திருக்கோணமலை, திங்கள்

மூதூரிலிருந்து வெருகல் ஓடிக் கொண்டிருந்த இரவு பஸ் சேவையை இ. போ. சபையினர் நிறுத்தி விட்டனர். இதனால் இங்குள்ள பலநூற்றுக் கணக்கான பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈச்சிலம்பத்தை கிராமத்தைச் சேர்ந்த பத்துக் கிராமமக்களுக்கும், இந்த பஸ் சேவை மூதூர், திருமலை ஆகிய பட்டணங்களுக்குச் செல்வதற்குச் சிறந்தது. எது வித அறிவித்தலுமின்றி இ பஸ்சேவையை நிறுத்தியதற்காக ஈச்சிலம்பத்தை மக்கள் ஓர் மகஜரை இ. போ. சபை மேலதிகாரிக்கு அனுப்பியுள்ளனர்.

∴ ∴ ∴

### கலைவிழா

நயினாதீவு, திங்கள்

மணிபல்லவ கலாமன்றக் கூட்டம் நயினாதீவு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது. புதுவருடத்தினத்தன்று கலைவிழாக் கொண்டாடுவதாதகவும் அதற்கு ஈழத்துச் சொற் செல்வர்கள் சிலரை வரவழைப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

∴ ∴ ∴

வேலணை, திங்கள்

வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் கடந்த மூன்றரை ஆண்டுகளாக ஆங்கில உதவி ஆசிரியராகக் கடமையாற்றி அண்மையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு சென்றிருக்கும் திருமதி நாகம்மா தேவராசாவின் சேவையை பாராட்டி பாடசாலையில் பிரிவுபசார விழா ஒன்று நடைபெற்றது.


—

### மாணவர்களுக்கு விசேஷ லீவு?

கொழும்பு, திங்கள்

மாணவர்களுக்கு விசேஷ லீவு வழங்கலாம் எனக் கல்வி இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன. சுகாதார இலாகா இளம்பிள்ளை வாதத்திற்கு தடுப்பு ஊசி பெருமளவில் ஏற்றிவரும் பொழுது மாணவர்களுக்கு விசேஷ லீவு வழங்கப்படலாமென கல்வி இலாகா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுபற்றி விரைவில் முடிவுசெய்யப்பட்டு பாடசாலை தலைமை ஆசிரியர்களுக்கு இது பற்றி அறிவிக்கப்படலாம் எனவும் தெரியவருகிறது.

அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால் வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்.



நாம் யாவரும் நன்றாய் சாப்பிடுகிறோம் அதிக சக்தியும் பெலனும உள்ளவர்களாய் இருக்கிறோம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.
மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானால் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள் அதிகப்படியான ருசியை மட்டுமின்றி

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

## வீட்டுடன் பஸ் மோதியது

வெலிகம, திங்கள்

தங்காலை 'மகாவெல மகா வித்தியாசாலை' மாணவர்களின் உல்லாசப் பிரயாணத்தின் போது, அவர்கள் சென்ற பஸ் இரவு நேரத்தில் ஒரு வீட்டுடன் மோதியதால், வீட்டிலுள்ள குழந்தையொன்று படுகாயமடைந்தது.

கொழும்பிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த பஸ், வெலிகம மகாவீதியில், ரோட்டுக்குக் குறுக்கே ஓடிய பசுமாட்டைக் காப்பாற்ற முற்பட்ட போது இந்த விபத்து ஏற்பட்டது. பலர் சிறு காயங்களோடு தப்பித்துக்கொண்டார்கள். பஸ் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார். பாடசாலை பிள்ளைகள் வேறு ஒரு பஸ்ஸில், அவர்கள் போகவேண்டிய இடத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

## விபத்து

எட்டியாந்தோட்டை, திங்கள்

ராமலானையிலிருந்து 60 யாத்திரீகர்களை ஏற்றிச் சென்ற இ. போ. ச. பஸ் ஒன்று எட்டியந்தோட்டையிலுள்ள பாலுள்ளவலை என்னும் இடத்தில் பாதையை விட்டு விலகி பலத்த சேதமடைந்தது. பிரயாணிகள் எவரும் சயமடையவில்லை.

சிவனொளிபாதமலைக்கு சென்று கொண்டிருந்த வான் ஒன்று கக்பல்லவாகே என்னுமிடத்தில் ஒரு காருடன் மோதியது. இருவான்களிலுமுள்ள பிரயாணிகளுக்கு காயங்கள் ஏற்படவில்லை.

## தபால்பை திருட்டு

பண்டாரவளை, திங்கள்

பண்டாரவளையிலிருந்து பதுளைக்கு அனுப்பப்பட்ட 20,000 ரூபாய் கொண்ட தபால் பை ஒன்று காணமற்போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக பண்டாரவளை பொலிஸ் தலைமை காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சோமாரவிக்கிரமா இங்குள்ள தபாற் கந்தோரில் விசாரணை நடத்தினர்.

## கமிட்டி நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கை கம்யூனிஸ்ட் மற்றும் முற்போக்கு வாலிபர் சம்மேளன யாழ்ப்பாணப் பிரதேச கமிட்டியின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- திரு. எஸ். ஜெயசிங்கம், உப தலைவர்:- திரு. நீர்வை பொன்னையன், காரியதரிசி:- திரு. கே. ஏ. சுப்பிரமணியம், உதவிக காரியதரிசி:- திரு. எஸ். செல்வராசா, தனாதிகாரி:- திரு. இ. கே. சூடாமணி.

12 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## வன இலாகாவிற்கு 225,000 ரூபா

கொழும்பு, திங்கள்

புகையிரதப் பகுதிக்குத் தேவையான சிலீப்பர் கட்டைகளை இருப்பில் வைத்திருப்பதற்கென வன இலாகாவிற்கு 225,000 ரூபாவை ஒதுக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அடிக்கடி சிலீப்பர் கட்டைகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுவருவதால் புகையிரத இலாகா வேலைகளில் தாமதம் ஏற்படுகிறது. சிலீப்பர் கட்டைகளை இருப்பில் வைத்திருந்தால் தேவைப்படும் பொழுது அவற்றை பிரயோகிக்கலாம் என்பதால் இதற்கென மேற்குறிப்பிட்ட தொகையை ஒதுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## வேலைதருவதாக ஆசிரியர்ஏமாற்றினராம்

பாணந்துறை, ஞாயிறு

டொன்டன் கொடைடையைச் சேர்ந்த டி. டபிள்யூ. ரணவீரா என்பவர் ஆசிரியர் வேலை எடுத்துத்தருவதாக இருவரிடமிருந்து முறையே 500 ரூபாவும் 750 ரூபாவும் வாக்கி பின்னர் அவர்களை ஏமாற்றியதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு பாணந்துறை கூட்டு மாவட்ட நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கே. கருணசேன என்பவரிடமிருந்து 500 ரூபாவும், ஜெயசேனவிடமிருந்து அவரின் சகோதரி சீலாவதிக்கு ஆசிரியர் வேலை எடுத்துத் தருவதாகக்கூறி 750 ரூபாவும் வாங்கி அவர்களை ஏமாற்றி விட்டதாக சாட்சியமளித்த கே. கருணசேன தெரிவித்தார் ரணவீரா பௌத்த சங்கத்தின் முகாமையின் கீழ் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் வேலை எடுத்துத்கருவதாகக் கூறினராம். சாட்சியம் கூறியதிலிருந்து ரணவீரா உண்மையில் வேலை எடுத்துத் தருபவர் போன்றே நடித்திருக்கிறார் என்பது தெரியவருகிறது. இரு சாராரிடமிருந்தும் பகுதி பகுதியாகவே அவர் பணத்தைப் பெற்றிருக்கின்ளுர். மேல் விசாரணை இம் மாதம் 30-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 'திறமையான அரசாங்கம் வேண்டும்' —டட்லி

தொடங்கஸ்லாந்தை, திங்கள்

"மக்களை மேலும் கஷ்டத்துக்குள்ளாக்காது, இந்த நாட்டை அபிவிருத்தி செய்ய இந்த அரசாங்கத்தினுல் முடியாவிட்டால் இந்த அரசாங்கம் உடனடியாக பார்லிமெண்டைக் கலைத்து, திறமான அரசாங்கமொன்றை தேர்ந்தெடுக்க மக்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்."

தொடங்கஸ்லாந்தையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கூட்டமொன்றில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. டட்லி சேனநாயக்கா தொடர்ந்து பேசுகையில், இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த 15 வருடங்களுக்குள், ஐக்கிய தேசியக் கசி 8 வருடங்களுக்கு இந்த நாட்டை ஆட்சி புரிந்திருக்கிற தென்றும், ஆனல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சுமார் 7 வருடங்கள் தான் ஆட்சி புரிந்திருக்கிறதென்றும், எந்த ஆட்சியின் போது இந்த நாடு முன்னேற்றமடைந்ததென்பது பொது மக்கள் நன்கறிவார்கள் என்றும் கூறினர்.

## 'காந்தியைப் பின்பற்றுகிறேம்'

இரத்தினபுரி, திங்கள்

"நாங்கள் மகாத்மா காந்தியைப் பின்பற்றுகின்றேம். எளிய வாழ்வும் உயரிய நோக்கங்களும் என்ற கொள்கையை நாங்கள் கடைப்பிடித்து வருகின்றேம்" என்று பாடசாலைத் திறப்பு விழாவொன்றில் ஹறங்கமுவ மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். சத்தியபாலா பேசுகையில் கூறினர்.

## இ. போ. ச.

### உயர்தர பதவிகள்

கொழும்பு, திங்கள்

இலங்கை போக்குவரத்து சபை, தனது உயர்தர பதவிகளை உடனடியாக நிரப்பும் எனத் தெரிகிறது. ஜெனரல் மனேஜர், பிரதம மனேஜர், பிரதம விநியோக அதிகாரி ஆகியோரின் பதவிகள் தற்காலிகமாக நிரப்பப் பட்டுள்ளன.

## வானொலி நிகழ்ச்சிகள

### புதன் 13-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 பரஞ்ஜோதி பரராஜசிங்கம்—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விவாத மேடை, 9-45 குரல்வகை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்தல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 கடத்தூர் சங்கரராமய்யர்—வீணை.

மாலை 4-45 விதிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி அரங்கம் (சென்னை அஞ்சல்), 7-45 'காவியப் பரிசு' — கவிதைநாடகம், 8-00 கடத்தூர் சங்கரராமய்யர்—வீணை, 9-15 நல்லுரை, 9-20 பொன்னொளிர்பாரதம் — இசை நிகழ்ச்சி, 9-50 இசை மாலை.

## ஊவாமாகாணத்தில் ஆசிரிய பயிற்சி கல்லூரி?

பண்டாரவளை, திங்கள்

பண்டாரவளை மாவட்டத்திலுள்ள பிந்துநுவிவ என்ற இடத்திலுள்ள பெண்கள் விவசாயப்பாடசாலையும், அரசாங்கப்பண்ணையொன்றும் விரைவில் மூடப்படும் எனத் தெரியவருகிறது. ஊவாமாகாணத்தில் ஒரு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்கும் பொருட்டு மேற்கூறிய இரு பண்ணைகளும் மூடப்படும் எனத் தெரிகிறது.

## 'திருக்கோணமலை அந்தாதி'

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலையின் பழம் பெரும் புலவர்களில் ஒருவரான ஸ்ரீ அகிலேசபிள்ளை என்பவரால் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட "திருக்கோணமலை அந்தாதி" என்னும் நூல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த ஏட்டுச் சுவடியில் திருக்கோணமலை நகரைப்பற்றியும் சுவாமி மலையிலுள்ள பழம் பெருமை வாய்ந்த கோணேஸ்வரர் ஆலயத்தைப் பற்றியும் விரிவாக விளக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி அந்தாதிநூல், திருக்கோணமலையின் வரலாறுகளை கொண்டு பெருமைமிக்கதாகக் காணப்படுவதாகவும் இருக்கிறது.

இந்நூலை அச்சேற்ற நகர பிரமுகர்கள் முயற்சித்து வருவதாக அறியவருகிறது.

## சோமாலி-பிரிட்டன் உறவு முறியும்

லண்டன், மார்ச் 11

சோமாலி குடியரசு, பிரிட்டனுடன் ராஜீய உறவை முறித்துக்கொள்வதெனத் தீர்மானித்திருக்கிறது.



நாளுக்கு நாள்

கடின பாவனைக்கு

நிகரற்று

விளங்குவது.

KANEBO POPLIN

கனேபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நல்ல பாவிக்க வல்ல புடவை இதுவே! கனேபோ பொப்ளின் பாடசாலை யூனிபோமகளுக்கும் கந்தோர் ... மிகச் சிறந்தது. ... மென்மையான ... வண்ணங்களிலும் கிடைக்கும் ... போகாது என்பதற்கு ...

வகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மங்கலம் ரோட் ... மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டபளியூ. ஈ. CWE ... சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/118

# "மொழி சமத்துவம் மட்டும் நம்பிரச்னையைத் தீர்க்காது"

## நடேஸ்வரா கல்லூரி பரிசளிப்பு விழாவில் திரு. சோமசேகரம் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

"இன்றைய வாலிபர்கள் சரித்திரத்தில் ஒருபோதுமில்லாத சிக்கலான பிரச்னைகளை எதிர்நோக்கியிருக்கிறார்கள். இதற்குப் பல காரணங்கள் உண்டு. நமது வாழ்வையும், மதத்தையும் அந்நிய மிஷனரிகளிடம் சரணடையச் செய்ததின்மூலம், நமது கலாச்சாரம் அழிந்திருந்தது" என உதவி கல்வி டைரக்டர் திரு. எஸ். யு. சோமசேகரம் நடேஸ்வராக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் சொற்பொழிவாற்றும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"எங்கள் இளமைக்கால ஞாபகம் நினைவுக்கு வருகிறது. தமிழ்ப் பாடசாலைகளைப் புறக்கணித்துவிட்டு, தமிழில் சிரத்தையே காட்டாது ஆங்கிலப் பள்ளிகளுக்கு மாணவர்கள் ஓடிய சமபவமே அது.

இதைத் தொடர்ந்து கால்சட்டையும், புதிய சப்பாத்துக்களும் அணிந்து கொழும்பில் அரசாங்க வேலைகளை எதிர்பார்த்திருந்தோம். அடிமை மனப்பான்மையின் காரணமாக தேசியத்தைப் புறக்கணித்தோம். நமது முன்னைய சந்ததியினர் விட்ட பிழையை நிவர்த்திக்க வேண்டும். சுதந்திரத்தின்பின், மாறுதலுக்கேற்ப நாம் செயல்பட வேண்டும்.

நமது குறிக்கோளான வாழ்க்கைத்தரத்துக்கு ஏற்ப இங்கு பொருளாதார நிலைமை இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கு நாம் பந்தம் பிடித்தோம் சுதந்திரம் கிடைத்தபின் நியாயமான மனப்பான்மையுள்ள எந்தத் தமிழனும் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்த அதே அந்தஸ்தை எதிர்பார்ப்பதற்கில்லை.

உண்மையான நிலைமையை உணர்ந்து நாம் செயலாற்ற வேண்டும். ஏராளமான இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கும் நிலையில் சாகுபடி செய்யப்படாத தரிசு நிலங்கள் இப்பகுதியில் பெருமளவு இருக்கிறது எனவே கிடைத்தவேலையைச் செய்யும் நிலையை நம் வாலிபர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். அரசியல் கோஷங்கள் நம் பிரச்னைகளைத் தீர்க்காது. மொழி சமத்துவத்தினுல் மட்டும் நாம் உயிர்வாழ முடியாது. அது உணவும்,உடையும் நமக்கு அளிக்கப்போவதில்லை. பெரிய பிரச்னைகள் நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டிருக்கும் வேளையில், சிறிய விஷயங்களில் சண்டை பிடித்து நேரத்தை நாம் வீணுக்குகிறோம். நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணமான போலி கௌரவத்தைக் கைவிட்டு, உண்மை நிலையை எதிர்நோக்குமாறு பெற்றோர்களையும், இளைஞர்களையும் விண்ணப்பித்துக் கொள்கிறேன். பழைய தவறுகளிலிருந்து பாடம் கற்போமாக"

---

# சந்திரனில் அணு ஆயுத பரீட்சை

ஜெனிவா, மார்ச் 12

சந்திரமண்டலத்தின் மறுபுறத்தில் அணு ஆயுத சோதனை நடத்தக்கூடிய நிலையில் சோவியத் யூனியன் இருப்பதாகவும் இதை அமெரிக்கா அறிந்திருப்பதாகவும் ஜெனிவாவில் நடைபெறும் 17 தேச படைகுறைப்பு மகாநாட்டில் சோவியத் பிரதிநிதி ஸராப்கின் கூறினர். இதனுல்தான் வானவெளி அணு ஆயுதப் பரீட்சைகளை முற்ருக நிறுத்த வேண்டுமென்று அமெரிக்கா கேட்கிறதென்றும் ஸராப்கின் கூறினர்.

---

# ரஷ்ய—அமெரிக்க கூட்டு ஆராய்ச்சி

ரோமாபுரி, மார்ச் 12

அமெரிக்க விஞ்ஞானிகளும், ரஷ்ய விஞ்ஞானிகளும் வான் வெளிபற்றி கூட்டாக ஆராய்ச்சியல் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

---

# கோணேஸ்வரர் ஆலய காணிகள்

## ஆக்கிரமித்தவர் மீது வழக்குத் தொடர தர்மகர்த்தாசபை தீர்மானம்

திருக்கோணமலை, செவ்வாய்

தம்பலகமம் கோணேஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான காணிகளை ஆக்கிரமித்துக் கொண்டு இருப்பவர்கள் மீதும் வயல் வளவுக் காணிகளைச் சேர்த்து வேலி அடைத்திருப்பவர்கள் மீதும் வழக்குத் தொடரப்படவிருக்கிறது.

வழக்குத் தொடருவதற்கான தீர்மானம் ஆலய தர்மகத்தா சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தலைவர் பண்டிதர் திரு. ஐ. சரவணமுத்து தலைமை வகித்தார். பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கோயிலைச் சுற்றி வெளிவீதிக்கு மதில் அமைக்கும் வேலையை தம்பலகமத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கொந்தராத்து கொடுத்தல்.

பழைய கோணேஸ்வரர் எழுந்தருளியிருக்கும் கோயிலுக்கு முன்னலிஉள்ள வீதியில் ஓர் மண்டபம் அமைப்பது.

---

# 'ஹிந்தியை திணிக்கக்கூடாது'

## —உபராஷ்டிரபதி

புதுடில்லி, மார்ச் 12

ஹிந்தி பேசுபவர்கள், தமது மொழியைப் பிறர்மீது கட்டாயமாகத் திணிக்கக் கூடாது என உதவிராஸ்டிரபதி டாக்டர் ஸாகிர்ஹுஸைய்ன் கூறினர். இதனுல் மனக்கசப்பு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

# ஷோம்பே

ஸாலிஸ்பரி, மார்ச் 12

கடாங்கா தலைவர் ஷோம்பே இன்று தென் ரொடீஷியாவிலிருந்து எலிஸபெத்வில்லிக்குப் புறப்பட்டார். ஸாலிஸ்பரியில் இருக்கும்போது அவர் தென் ரொடீஷியப் பிரதமர் சர் ரராய் வெலன்ஸ்கியின் உத்தியோக வாசஸ்தலத்தில் தங்கியிருந்தார்.

---

# பிரயாணிக்கு ரூ. 300 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

இந்தியப் பிரயாணி ஒருவர் பலாலி விமான நிலையத்திலிருந்து திருச்சிக்குச் செல்லும் வழியில் 100 ரூபாய் பெறுமதியான சவர்ன் கடத்திச் செல்ல முயன்றது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக விசாரணை நடத்திய சுங்க இலாகா உதவி கலெக்டர் திரு. கே. திருநாவுக்கரசு சவரனைக் கடத்திச் செல்ல முயன்றவருக்கு 300 ருபா அபராதம் விதித்தார்.

---

# விடுதலை முன்னணி வற்புறுத்து

அல்ஜியர்ஸ், மார்ச் 12

அங்கோலாவுக்குச் சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என அல்ஜீரிய தேசியவிடுதலை முன்னணி வற்புறுத்தியிருக்கிறது.

---

# இசையாளர் தூதுகோஷ்டி

## திரு. கெனமனிடம் முறையீடு

யாழ்ப்பாணம், புதன்

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. பீட்டர் கெனமன் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது யாழ். இசையாளர் சங்க தூதுகோஷ்டியொன்று அவரைச் சந்தித்தது.

திரு. கெனமனிடம் இசையாளர் சமூகத்தை எதிர்நோக்கியுள்ளபிரச்னைகள் பல தெளிவாக விளக்கிக் கூறப்பட்டன. இந்தியக் கலைஞர்கள் இலங்கைக்கு வருவதுபற்றி தமது கொள்கையையும் அவர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கம் இவ்வாண்டு ஆறு கலைஞர்கள் இலங்கைக்கு வர அனுமதிக்க முடிவு செய்துள்ளது எனவும், பர்மிட்டுகளும் இசையாளர் சங்க மூலம் விண்ணப்பித்தவர்களுக்கு அதிர்ஷ்ட சீட்டுமூலம் வழங்கப்படவேண்டும் என்றும், தனிப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு வழங்கக்கூடாதெனவும அரசாங்கத்தை வற்புறுத்தும்படி இசையாளர் தூதுகோஷ்டி திரு. கெனமனிடம் வற்புறுத்திக் கூறியது. இவ்விஷயமாக திரு. கெனமன் அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதாகத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

---

# உரிமைப்பிரச்னை நிராகரிப்பு

சென்னை, மார்ச் 12

இன்று சென்னை கீழ் சபையில் தி. மு. க. அங்கத்தினர் திரு. கே. ஏ. மதியழகன் கிளப்பிய உரிமைப்பிரச்னை சபாநாயகர் திரு. செல்லபாண்டியன் நிராகரித்துவிட்டார்.

இம்மாதம் 5-ந் திகதி "விடுதலை"பத்திரிகையில், பஸ் போக்குவரத்து சம்பந்தமாக சட்டசபையில் தி. மு. க. அங்கத்தினர்களின் கேள்விகள் பற்றி பிரசுரமான பகுதிகள் சபை உரிமையை மீறுவதாகும் என்று திரு. மதியழகன் கூறினர்.

---

# 96 நாடுகளில் பெண்ணுரிமை

நியூயோர்க், மார்ச் 12

96 நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை இருப்பதாக ஐ. நா. அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

---

# இலங்கையும் பங்குபற்றுகிறது

வாஷிங்டன், மார்ச் 12

வாஷிங்டனில் நடைபெற்று வரும் கைப்பணிப் பொருட்காட்சியில் இலங்கை உட்பட 43 நாடுகள் கலந்துகொள்கின்றன.

---

# ஒழுங்கு தவறும் எம். பி. க்கள் மீது நடவடிக்கை

## லோகசபைக் கமிட்டி சிபார்சு

புதுடில்லி, மார்ச் 12

பார்லிமெண்டில் ராஷ்டிரபதி உரை நிகழ்த்தும்போது இனி ஒழுங்கு தவறி நடந்துகொள்பவர்களை ஒருவருடகாலத்துக்குச் சபையிலிருந்து விலக்கி வைக்கவேண்டும் என்று லோகசபைக கமிட்டியொன்று சிபார்சு செய்துள்ளது.

சென்றமாதம் பார்லிமெண்டின் கலப்புக் கூட்டத்தில் ராஷ்டிரபதி உரைநிகழ்த்துகையில் இந்தியில் அவர் உரையை நிகழ்த்த வேண்டுமென்று கோரி சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

இந்த அங்கத்தவர்களின் நடத்தை பற்றி விசாரிப்பதற்கு லோகசபை சபாநாயகர் திரு. கிருஷ்ணராவின் தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தார். இந்தக் கமிட்டி தனது அறிக்கையை இன்று லோகசபையில் சமர்ப்பித்தது.

வெளிநடப்புச்செய்த அங்கத்தவர்களில் மூவரின் நடத்தையைக் கண்டிக்கவேண்டுமென்றும் மற்றும் இவருர் மீதும் குறைவான நடவடிக்கை எடுக்கப்படலாமென்றும் கமிட்டி சிபார்சு யெய்துள்ளது.

இனி இவ்விதம் ஒழுங்கு தவறி நடப்பவர்களை ஒருவருடகாலத்துக்குச் சபை நடவடிக்கைகளிலிருந்து விலக்கிவைக்க வேண்டுமென்று கமிட்டிசிபார்சு செய்துள்ளது.

---

# காஷ்மீர்பேச்சு ஆரம்பம்

கல்கத்தா, மார்ச் 12

கல்கத்தாவில் இன்று பிற்பகல் இந்திய-பாகிஸ்தான் பிரதிநிதிகளிடையே காஷ்மீர் சம்பந்தமான 4-வது பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. பேச்சுவார்த்தைகளுக்கு முன் பிரிட்டிஷ் ஹைக்கமிஷனர் திரு. கோர்பூத் இரு கோஷ்டித் தலைவர்களான திரு. சுவர்ண்சிங்கையும், திரு. புட்டோவையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசினர்.

காஷ்மீர் தீர்வுக்கு நியாயமாகவும், கௌரவமாகவும் ஒரு பரிகாரம்காண முயலப்போவதாக இரு தூதுகோஷ்டித் தலைவர்களும் நிருபர்களிடம் அறிவித்தனர்.

---

# "நியூட்ரன் குண்டு வரும்"

வாஷிங்டன், மார்ச் 12

கடைசி ஆயுதமாக நியூட்ரன் குண்டு தயாரிக்கப்படும் சாத்தியமிருப்பதால், அணு சோதனைத் தடையை அமெரிக்கா விரும்புகிறது என வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் கூறினர்.


இப்பொழுது நடைபெறுகிறது

வீர காவியம் !!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) | ராஜ் (நீர்கொழும்பு) | விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) | தீவொளி (நுவரேலியா) | ஜெமினி (ருகலை) | ஸ்ரீகிருஷ்ண (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன.

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனோகரா (யாழ்ப்பாணம்)
பாலாஜி,, சரோஜாதேவி நடித்த
மனமுள்ள மறுதாரம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.